25th December 2023

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 11 | பக்கங்கள் - 12 | editor.uthayam@gmail.com

## மீண்டும் முகக் கவசம்



(ஐ. ஏ. காதிர் கான்)

மக்கள் மீண்டும் முகக்கவசம் அணிய வேண்டும் என, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் ஒவ்வாமை மற்றும் உயிரணு தொடர்பான கற்கை நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார்.

"ஜே.என். 1 ஒமிக்ரோன்" உப பிறழ்வான புதிய கொவிட் வைரஸ் திரிபு, இலங்கையிலும்

02ம் பக்கம்பார்க்க...

## அக்குறணை வெள்ள விவகாரம்;

# சட்ட விரோத கட்டிடங்களை அகற்ற நீதிமன்ற கட்டளை!

### செயற்படுத்துவதற்கு அதிகாரிகள் தயார்

### தெரிவிக்கிறார் மு.கா தலைவர் ஹக்கீம்



அக்குறணை வெள்ள விவகாரம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்றத்திடமிருந்து பெறப்பட்ட (சட்டவிரோத கட்டுமானங்களை) அகற்றுவதற்கான உத்தரவுப் பத்திரம் என்பவற்றை அபிவிருத்திக் குழுவிடம் அறிக்கையிடுமாறு தான் கேட்டிருந்ததாகவும்,ஜனாதிபதியுடன் டிசெம்பர் 17ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் பிரசன்னமாகியிருந்த

நகர அபிவிருத்தி அதிகார சபையின் காணி உறுதிப் பத்திரங்களுக்கு பொறுப்பான பிரசாத் என்ற அதிகாரி அதற்கான நீதிமன்றக் கட்டளை கிடைத்திருப்பதாகவும் ,அவர்கள் அதனை செயற்படுத்தத் தயாராக இருப்பதாகவும் கூறியதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

02ம் பக்கம்பார்க்க...

## ஒரு இலட்சத்து 38,000 பேர் 2022ல் சிறை வாசம்

### இதற்குள் 437 பட்டதாரிகள்; பேராசிரியர் அத்துகோரல கவலை

(ஐ.ஏ. காதிர் கான்)

கடந்த 2022 ஆம் ஆண்டின் காலப்பகுதிக்குள் மாத்திரம், ஒரு இலட்சத்து 38 ஆயிரத்து 596 பேர், நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள சிறைச்சாலைகளில் சிறைவாசம் அனுபவித்து வருவதாகவும், இதில் 437 பட்டதாரி

02ம் பக்கம்பார்க்க...

## அரச உத்தியோகத்தர்களின் விடுமுறையிலும் வருகிறது வெட்டு

### 45ஐ 25 ஆக குறைக்க முன்மொழிவு

(ஐ. ஏ. காதிர் கான்)

அரச உத்தியோகத்தர்களுக்கு தற்போது வழங்கப்படும் விடுமுறையின் எண்ணிக்கையை, 45 நாட்களில் இருந்து 25 ஆகக் குறைப்பது தொடர்பான பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியங்களுக்கான பணிப்பாளர் நாயகம், திறந்த மற்றும் பொறுப்பான அரசாங்கத்திற்கான துறைசார்

03ம் பக்கம்பார்க்க...



## நான் ஒருபோதும் முஸ்லிம் மக்களின் எதிரியல்ல

### – பலஸ்தீன இலங்கைத் தூதுவரிடம் மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

பலஸ்தீன மக்களுக்காக நான் அன்றும் குரல்

02ம் பக்கம்பார்க்க...

## அலவி மௌலானா நிலையத்தை பாதுகாக்க பிரதேச வாசிகள் மனு தாக்கல்

கொழும்பு மருதானை சுது வெள்ளையில் நீண்ட காலமாக இயங்கி வரும் அலவி மௌலானா சனசமூக நிலையத்தைப் பாதுகாப்பதற்காக பிரதேசவாசிகள் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யவுள்ளனர்.

கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் ஐக்கிய தேசிய கட்சி ஜனாதிபதி வேட்பாளருக்காக ஜனாதிபதி வேட்பாளர்

03ம் பக்கம்பார்க்க...



## மலையக மக்களின் உரிமைகளை எமது ஆட்சியில் பலப்படுத்துவோம்

### நுவரெலிய மாநாட்டில் சஜித் உறுதி

மலையக மக்கள் முன்னணி "200 இல் மலையகம் மாற்றத்தை நோக்கி"

06ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும் | ஃபிச் ரேட்டிங்: RWN (lka) ஸ்திரமான நிலை

# உச்சத்தில் தேசிய ம.ச. கருத்து கணிப்பில் தகவல்

எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு நடத்தப்படும் எந்த தேசிய தேர்தலாக இருந்தாலும் தேசிய மக்கள் சக்தி அமோக வெற்றியை பெறும் என விசேட புலனாய்வு அறிக்கை மூலம் ஜனாதிபதியிடம் விரிவான விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

கடந்த ஒன்றரை வருட காலத்திற்குள் தேசிய மக்கள் சக்தியின் பிரபலம் அதிகரித்துள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலைமை தொடர்ந்தால், அடுத்து நடைபெறும் தேர்தல்களில் ஏற்படக்கூடிய நிலைமைகள் தொடர்பான விபரமான விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

நாட்டின் கிராமங்களில் இதற்கு முன்னர் ஏனைய பிரதான கட்சிகளுக்கு ஆதரவளித்து வந்த பலர் தற்போது தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளதாக புலனாய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.




## மீண்டும்...

(முன் பக்கத் தொடரச்சி)

பரவி வருகின்றமையே, இதற்குக் காரணமென அவர் தெரிவித்துள்ளார்.

இதன் விளைவாக, இலங்கை மக்களுக்கு சளி போன்ற நிலைமை ஏற்படலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில், மக்கள் முன் கூட்டியே அவதானமாக இருந்து கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ள அவர், பயணங்களின் போதும், அலுவலகங்களில் பணிகளை மேற்கொள்ளும்போதும் முகக்கவசங்களை இயன்றளவு அணிந்து கொள்ளுமாறும், பேராசிரியர் சந்திம ஜீவந்தர மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தான்...

(முன் பக்கத் தொடரச்சி)

கொடுத்தேன். இன்றும் குரல் கொடுப்பேன். இனிமேல் எப்போதும் எனது ஆதரவு பலஸ்தீன மக்களுக்கே என, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பலஸ்தீனுக்கான இலங்கைத் தூதுவரை மீண்டும் சந்தித்தபோது தெரிவித்துள்ளார்.

நான் பௌத்த மதத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும், அனைத்து மதங்களையும் நேசிப்பவன்.

எனது அரசியல் எதிரிகள், உண்மைக்குப் புறம்பான பல தகவல்களை வெளியிடலாம். ஆனால், நான் ஒரு நாளும் இனவாதியல்ல. இதேபோன்று, தான் ஒருபோதும் முஸ்லிம் மக்களின் எதிரியுமல்ல.

நான் ஒரு பௌத்த மதத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும், முஸ்லிம் மக்களையும் நேசிப்பவன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(இன்று இலங்கையிலே பல அரசியல் கட்சித் தலைவர்கள் இருந்தாலும், தைரியமாக நிமிர்ந்து, "தனக்கு இனிமேலும் முஸ்லிம் வாக்குகள் கிடைக்காது" என்ற நிலைப்பாட்டை அறிந்தும்,

தனக்கு இருக்கும் சிங்கள பெரும்பான்மை வாக்குகள் சரிந்தாலும் பரவாயில்லை.

"தான் எப்போதும் முஸ்லிம் மக்களின் எதிரி அல்ல" என்பதை, இலங்கைக்கு மட்டுமல்லாது முழு உலகுக்கும், ஒரு அரச தலைவனாக நிமிர்ந்து நின்று கூறியுள்ளதை, இலங்கை முஸ்லிம்கள் பாராட்டி ஆகவேண்டும்.)

(ஐ. ஏ. காதிர் கான்)

## ஒரு இலட்சத்துக்கு...

(முன் பக்கத் தொடரச்சி)

மாணவர்கள் உள்ளடங்குவதாகவும், பேராதெனிய பல்கலைக் கழகத்தில் பொருளாதார (பொருளியல்) விஞ்ஞானப் பிரிவு மற்றும் தொகை மதிப்பீட்டுப் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள சுட்டிக்காட்டியுள்ளார்.

பாரிய குற்றச்செயல்களைப் புரிந்த மற்றும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் பலர் இதில் அடங்குவதாக சுட்டிக்காட்டியுள்ள பேராசிரியர் அத்துகோரள, குற்றமிழைத்ததாகக் கருதப்படும் 121 பட்டதாரி மாணவர்கள் இதில் அடங்கியிருப்பது வேதனைக்குரிய விடயமாகும் என்றும் பேராசிரியர் கவலை வெளியிட்டுள்ளார்.

சிறைச்சாலைகளில் உள்ளவர்களில், வயது அடிப்படையில் 78 வீதமானவர்கள் 22 - 50 வயதுக்கு இடைப்பட்ட மற்றும் க.பொ.த. சாதாரண தரத்திற்கும் குறைவான மட்டத்தில் கல்வியைத் தொடர்ந்தவர்கள் என்றும் அத்துடன், 64 வீதமானவர்கள் 8 ஆம் வகுப்பு அல்லது அதற்கும் குறைவான தரத்தில் கல்வி கற்றவர்கள் என்றும் ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளதாகவும் பேராசிரியர் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

சிறை வாசம் அனுபவித்து வருபவர்களில் 99 வீதமானவர்கள் (29,941 பேர்) ஆண்கள் என்றும், 1 வீதமானோர் (390 பேர்) பெண்கள் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு (19 வீதம்), கம்பஹா (14 வீதம்), குருநாகல் (6 வீதம்), கண்டி (6 வீதம்), களுத்துறை (5 வீதம்) என்ற அடிப்படையில், இப்பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே சிறையில் இருந்து வருவது ஆய்வுகளின் மூலம் தெரிய வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமது பிள்ளைகளுக்கு, சரியான முறையில் கல்விப் போதனைகளை வழங்கி, அவர்களுக்கு நல்ல வழிகாட்டுதல்களையும் அறிவுறுத்தல்களையும் பெற்றோர்கள் வழங்குவதன் மூலம், அவர்கள் சிறைவாசம் அனுபவிப்பதற்கான தேவை ஏற்படாது என்றும் பேராசிரியர் வசந்த அத்துகோரள அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

## அரச...

(முன் பக்கத் தொடரச்சி)

மேற்பார்வைக் குழுவிற்கு, அந்த நோக்கத்திற்காக நிறுவனக் குறியீட்டின் விதிகளைத் திருத்துவதற்கு முன் மொழிந்துள்ளார்.

விடுமுறை நாட்களை 10 சாதாரண விடுமுறை நாட்களாகவும், 15 ஒய்வு விடுமுறை நாட்களாக மாற்றுவதற்கும் முன்மொழிவுகள் செய்யப் பட்டுள்ளன.

இதன்பிரகாரம், ஓய்வூதியச் செலவு அரச செலவீனத்தில் 11.4மூ என சுட்டிக்காட்டியுள்ள ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம், செலவினங்களை நிர்வகிப்பதற்கு முழுப் பொதுத் துறையினரும் பங்களிக்க வேண்டுமென, துறைசார் கண்காணிப்புக் குழுவின் முன் தெரிவித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

திறந்த மற்றும் பொறுப்பான அரசாங்கத்திற்கான 45 முன் மொழிவுகளை, பணிப்பாளர் நாயகம் சமர்ப்பித்துள்ளதாக துறைசார் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

இங்கு, ஓய்வுபெற்ற சமூகத்தின் நலனுக்காக எதிர்பார்க்கப்படும் நிவாரணங்கள் தொடர்பான ஆலோசனைகளையும், ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் முன்வைத்துள்ளார்.

பொலிஸ் மற்றும் இராணுவ வீரர்கள் சங்கம் உள்ளிட்ட குழு உறுப்பினர்கள் முன் வைத்த முன்மொழிவுகள் தொடர்பில், ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் ஜகத் டி. டயஸ் துறைசார் கண்காணிப்புக் குழுவிற்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.






# ஜனவரி 01 முதல் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்போம்

## - மருத்துவர் சங்கம் எச்சரிக்கை -

(ஐ. ஏ. காதிர் கான்)

"சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைக்குத் தீர்வைப் பெற்றுக் கொள்வதற்காக முன்வைக்கப்பட்ட யோசனை மற்றும் நிலைப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு தொடர்ந்தும் கால தாமதம் ஏற்பட்டால், ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து கடுமையான தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்போம்" என்று, அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி இடம்பெறவுள்ள அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய செயற்குழுவில் இதுதொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாக, அச்சங்கத்தின் செயலாளர் ஹரித்த அளுத்கே தெரிவித்தார்.

கொழும்பில் (20) புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து இதுவரையில் 1,700 க்கும் அதிகமான விசேட வைத்தியர்கள் நாட்டிலிருந்து வெளியேறியுள்ள துடன், மேலும் 5,000 இற்கும் அதிகமான வைத்தியர்கள் நாட்டிலிருந்து வெளியேறுவதற்கான ஆபத்து நிலைமை உள்ளது.

வைத்தியர்களின் தட்டுப்பாட்டின் காரண மாக 20 இற்கும் அதிகமான சிறியளவிலான வைத்தியசாலைகள் முழுமையாக மூடப்பட்டுள்ளதுடன், மேலும் 400 இற்கும் அதிகமான வைத்தியசாலைகளும் விசேட வைத்தியப் பிரிவுகளும் முடங்குவதற்கான ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே, ஆரம்பிக்கப்பட்ட சில பணிப்புறக்கணிப்புகள், இதுவரையிலும் முன்னெடுக்கப்பட்டே வருகின்றன. எனவே, அதிகாரிகளிடமிருந்து சரியான பதில் கிடைக்காவிட்டால், ஜனவரி முதலாம் திகதியிலிருந்து மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பமாகும் என்றார்.

# பைஸர் மரிக்கார், மொஹமட் ஆதம்அலி உள்ளிட்ட 10 புதிய ஜனாதிபதி சட்டத்தரணிகள் ஜனாதிபதியால் நியமனம்

(ஐ. ஏ. காதிர் கான்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் 10 புதிய சட்டத்தரணிகள் "ஜனாதிபதி சட்டத்தரணிகளாக" நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் விரைவில் உயர் நீதிமன்றத்தின் சம்பிரதாய அமர்வைத் தொடர்ந்து, பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர்.

அவ்வாறு பதவி உயர்வு பெற்ற சிரேஷ்ட சட்டத்தரணிகளான சமந்த வீரகோன், கலாநிதி அசங்க குணவன்ச, மொஹமட் ஆதம்அலி, ஹர்ஷ பெர்னாண்டோ, கலாநிதி சிவாஜி பீலிக்ஸ், பைஸர் மரிக்கார், கௌசல்யா நவரத்ன, உபுல் குமாரப்பெரும, விரன் கொரியா, எராஜ் டி. சில்வா ஆகிய 10 பேர்களுமே, ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## அலவி...

(முன் பக்கத் தொடரச்சி)

ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரசாரத்திற்குப் பொறுப்பான கிஸ்ரி ராஜபக்ஷ வினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அலவி மௌலானா சனசமூக சமூகநிலையம் கொழும்பு மாநகர சபையினால் நிர்மாணிக்கப்பட்டது.

பிரதேசத்தில் வாழும் வறிய மக்களினால் பயன்படுத்தும் இந்நிலையத்தின மதில் உடைக்கப்பட்டு அருகிலுள்ள விகாரையுடன் இணைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த அத்துமீறல் தொடர்பாக மேல்மாகாண ஆளுநர் மற்றும் கொழும்பு மாநகர ஆணையாளர் ஆகியோருக்கு முறைப்பாடு செய்த போதும் எவ்வித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக முன்னாள் மாநகர சபை உறுப்பினர் கிஸ்சிறி ராஜபக்ஷவிடம் கேட்டபோது, விகாரையின் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளும் போது தவறுதலாக மதில் உடைந்துள்ளது. அதனை எனது சொந்தச்செலவில் நிர்மாணித்து தருவதாகத் தெரிவித்தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர்ரஹ்மான் இது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். ஏழை மக்களினால் பயன்படுத்தப்படுகின்ற இந்த சன சமூக நிலையத்தைப் பாதுகாத்துத் தருமாறு அவர் கேட்டுள்ளார்.

## சட்ட...

(முன் பக்கத் தொடரச்சி)

அக்குறணை நகர் அடிக்கடி வெள்ளத்தில் மூழ்குவது தொடர்பிலும், அதனை ஊடறுத்துச் செல்லும் பிங்கா ஓயா ஆற்றுப் படுகையின் மருங்கிலுள்ள ஒதுக்கீட்டு (Reservation) நிலம் தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுடன், கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை (17) நடத்திய கலந்துரையாடலின் போது அந்த மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் முன் வைத்த முறைப்பாடுகளையும் ஆலோசனைகளையும் மையப்படுத்தி மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவுக்கு மறுநாள் 18ஆம் திகதியிட்ட நீண்ட கடிதமொன்றை அவர் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் ஜனாதிபதியுடனான பிரஸ்தாப கலந்துரையாடலின்போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக. சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களைக் கொண்டு இயன்றவரையில் விரைபாக நடைமுறைப்படுத்துமாறு ரவூப் ஹக்கீம் ஆளுநரிடம் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

இந்த உயர்மட்ட கலந்துரையாடலின் போது தாம் தெரிவித்த முறைப்பாடுகளோடு தொடர்புபட்ட நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் 31.01.2022ஆம் திகதி மற்றும் 15.02.2023 ஆம் திகதியிட்ட இரு கடிதங்கள் மற்றும் கட்டிட வரைபடங்களின் நகலகளையும் இதனோடு இணைத்திருப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளதோடு, அக்கடிதத்தில் பிரஸ்தாப விடயத்தோடு சம்பந்தப்பட்ட கீழ்வரும் அம்சங்களின் மீது உரிய கவனஞ் செலுத்துமாறும் ஆளுநரைக் கேட்டுள்ளார்.

அவரது கடிதத்தில் அடங்கியுள்ளவையாவன:

1. எனது அறிவுறுத்தலின்படி, நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அளவீடு செய்யப்பட்ட திட்ட வரைபடம் மற்றும் அபிவிருத்தி விதிமுறைகளுக்குப் புறம்பாக அத்துமீறி நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் முழுமையான பட்டியலின் அவசியத் தேவை.

2. இந்த விடயத்தை நான் சில மாதங்களுக்கு முன்னர் அக்குறணை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் நடைபெற்ற அக்குறணை பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நான் எழுப்பி, அங்கு வந்திருந்த அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிநிதியிடம் அதுவரை மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்றத்திடமிருந்து பெறப்பட்ட (சட்டவிரோத கட்டுமானங்களை) அகற்றுவதற்கான உத்தரவுப் பத்திரம் என்பவற்றை அபிவிருத்திக் குழுவிடம் அறிக்கையிடுமாறு கேட்டிருந்தேன்.

3. ஜனாதிபதியுடன் டிசெம்பர் 17ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் பிரசன்னமாகியிருந்த நகர அபிவிருத்தி அதிகார சபையின் காணி உறுதிப் பத்திரங்களுக்கு பொறுப்பான பிரசாத் என்ற அதிகாரி அதற்கான நீதிமன்றக் கட்டளை கிடைத்திருப்பதாகவும் அவர்கள் அதனை செயற்படுத்த தயாராக இருப்பதாகவும் கூறினார்.

4. நீர்பாசனத் திணைக்களமும், மகாவலி அதிகாரசபையும் ஒதுக்கீட்டு எல்லைகளை அடையாளம் கண்டு அக்குறணைபிரதேச சபைக்கும், பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கும்,நகர அபிவிருத்தி அதிகா சபைக்கும் அறிவித்து கட்டுமாண விதிமுறைகளை கண்டிப்பாக கடைப்பிடிக்குமாறுஅறிவுறுத்த வேண்டும்.

5. பிங்கா ஓயாவை சூழவுள்ள பிரதேசங்களின் நீர் வழிந்தோடக்கூடிய பிரதான செயற்திட்டத்தை(Master Plan) நில அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தை கொண்டு தயாரித்தல்

6. பிங்கா ஓயாவின் நடாத்துகை (Maintenance) மேற்பார்வை, முகாமைத்துவம் என்பன நீர்பாசன திணைக்களம், காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம், மகாவலி அதிகார சபை நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றின் கூட்டு முயற்சியாக இருக்க வேண்டும்

7. பொல்கொல்ல அணைக்கட்டின் மேல் நோக்கிய ஆற்றுப் படுகையை பிங்கா ஓயா சங்கமிக்கும் கட்டுகஸ்தோட்டைப் பிரதேசத்தை நோக்கி அகழ்ந்து சீர்செய்வது அவசியமாகும். நீர் பாரிய உள்வாங்கு பிரதேசத்தை(Catchment area) ப் பொறுத்தவரை அது மிகவும் சிரமமாக காரியமாகவே இருக்கும்.ஆற்றுப் படுகையில் நீர் இயல்பாக வழிந்தோடும் விதத்தில் இதற்கு நிபுணத்துவ ஆலோசனை உரிய முறையில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியுள்ளது.

8. கூட்டத்தில் நான் எடுத்து விளக்கியவாறு, ஏ-9 பிரதான வீதி மற்றும் துணுவில வீதி சந்தி பாலம் மீள் வரையப்பட்டு, மீள் நிர்மாணப் செய்யப்பட வேண்டியுள்ளது. அதன் நீள, அகலம், உயரம் என்பன சரிவர அமையப் பெறாத நிலையில் பிங்கா ஓயாவின் கிளை அருவிகளிலிருந்து பெருமழையின் போது பெருக்கெடுத்து வரும் நீர் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது. கூடுதலான மழை வீழ்ச்சியின் காரணமாக பெருக்கெடுத்து ஓடும் நீரின் வேகம் பாலத்தின் கீழாக போடப்பட்டுள்ள தொலைபேசி கேபிள்கள் காரணமாக தடைப்படுவதால் மண்டி மற்றும் சகதி போன்றன நிரம்பி நீரின் ஓட்டத்தை தடுப்பதன் விளைவாக பாரிய வெள்ளப் பாதிப்பு ஏற்படும் அபாயம் தொடர்ந்தும் நிலவி வருகின்றது.

கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதி செயலாளர், கண்டி மாவட்ட செயலாளர் ,அக்குறணை பிரதேச செயலாளர் ,பாராளுமன்ற உறுப்பினர் எம்.எச்.ஏ.ஹலீம், பிரதி அமைச்சர் திலான் அமுனுகம, பிரதேச சபை செயலாளர், அக்குறணை பள்ளிவாசல் சம்மேளனத் தலைவர் அக்குறணை ஜம் இய்யத்துல் உலமா, அக்குறணை வர்த்தக சங்கத் தலைவர் மற்றும் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களின் உயரதிகளுக்கும் அனுப்பப்படுவதாக அதில் காணப்படுகின்றது.







www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

2023 DECEMBER 25

WEB: www.uthayam.lk

E-mail: editor.uthayam@gmail.com

FB ID: உதயம்

## எம்.எச்.எம்.அஷ்ரப்பின் மரணத்தில் எழுந்துள்ள சந்தேகம் தீர்க்கப்படுமா?

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தேசிய ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் ஸ்தாகசுத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ர்பின் 75 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு தேசிய ஐக்கிய முன்னணி கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அஷ்ரப்பின் மரணத்திற்கான காரணத்தில் சந்தேகம் இருப்பதாக கூறியுள்ளார்.

முன்னாள் அமைச்சர் அஷ்ரப் பயணித்த ஹெலிகொப்டர் அரநாயக்காவில் விபத்துக்குள்ளான விடயத்தில் எனக்கின்னும் சந்தேகம் இருக்கின்றது. உண்மையில் இது ஒரு விபத்தா அல்லது எவரேனும் திட்டமிட்ட சதியா என்பது இன்னும் புரியாத புதிராக இருப்பதாக சந்திரிக்கா அம்மையார் கூறியுள்ளார். மர்ஹூம் அஷ்ரப் மரணித்த போது ஆட்சியிலிருந்த ஜனாதிபதி கூட அஷ்ரப்பின் மரணம் தொடர்பில் சந்தேகத்திலேயே இருக்கிறார். இந்தச் சந்தேகம் அவருக்கு மட்டுமன்றி பலருக்கும் இருக்கின்றது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மை கண்டறியப்பட வேண்டுமென அக்காலத்தில் பலரும் வலியுறுத்திய போதும் அது குறித்து பதவியிலிருந்த அரசாங்கங்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மர்ஹூம் அஷ்ரபின் அரசியல் செயற்பாடுகள் பலருக்கும் சவாலாகவே இருந்தது. நாட்டில் முஸ்லிம்களது வாக்குகளை வைத்து பெரும் பெரும் அரசியல் கட்சிகளுடன் பேரம் பேசும் அளவுக்கு முஸ்லிம் காங்கிரஸ் வளர்ந்திருந்தது. அப்போதைய ஜனாதிபதிகளான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, ரணசிங்க பிரேமதாஸவினது அரசியல் பயணத்திலும்செல்வாக்குச்செலுத்துவதாகஅஷ்ரப்இருந்தார். முஸ்லிம்களது அரசியல் பெரும் தேசிய அரசியலோடும், தமிழ் அரசியலோடும் பிண்ணிப் பிணைந்திருந்த அக்காலத்தில் மர்ஹூம் அஷ்ரபின் அரசியல் பயணம் பிரதான அரசியல் கட்சிகளுக்கு சவாலாகவே இருந்தது.

கிழக்கு மாகாண அரசியலில் மிகப் பெறும் செல்வாக்குச் செலுத்திய மர்ஹூம் அஷ்ரப் எந்தப் பக்கம் இருக்கிறரோ, அந்தப் பக்கம் ஆட்சியமைக்கும் நிலை கூட உருவாகியிருந்தது. அந்தப் பின்னணியிலேயே அஷ்ரப்பின் மரணம் இடம்பெற்றது. மர்ஹூம் அஷ்ரபின் மரணம் தொடர்பாக சந்திரிக்கா அரசு நியமித்த விசாரணைக்குழுவின் அறிக்கை அரசுக்கு கையளிக்கப்பட்ட போதும் அந்த அறிக்கை பகிரங்கப்படுத்தப்படவில்லை. சந்திரிக்கா அம்மையார் நியமித்த விசாரணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதி சந்திரிக்காவுக்கே கையளிக்கப்பட்டது. அவர் இந்த அறிக்கையை நிச்சயமாக படித்திருப்பார். வெறுமனே பெட்டகத்துக்குள் போட்டிருக்க மாட்டார். எனவே அவரே சந்தேகம் வெளியிடுவதாக இருந்தால் இந்த மரணம் பற்றி ஏதேனும் மர்மம் இடம்பெற்றிருக்கலாமென்று சந்தேகிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே மர்ஹூம் அஷ்ரபின் மரணம் திட்டமிட்ட சதியா அல்லது விபத்து மரணமா என்பது தொடர்பில் கண்டறிவதற்காக ஒரு பலம் வாய்ந்த விசாரணைக்குழுவை அரசு நியமித்து முஸ்லிம்களது மட்டுமன்றி முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாரின் சந்தேகத்தையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய ஐக்கிய முன்னணி உட்பட சகல தரப்பினரும் பலம்வாய்ந்த விசாரணைக்குழுவொன்றை ஏற்படுத்த அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

தேசிய பத்திரிகையாக (மின்னிதழ்) “உதயம்”
இன்றிலிருந்து வாசகர்கள் மத்தியில் வலம்வரவுள்ளது.
இப் பத்திரிகைக்கு தங்களின் பேராதரவை எதிர்பார்ப்பதுடன்
கீழுள்ள QR ஐ Scan செய்வதனூடாக எமது வட்ஸ்அப்
குழுமத்தில் இணைந்து ஒவ்வொரு வெளியீட்டின் பிரதிகளையும்
இலவசமாக பார்வையிடலாம்...

அத்துடன், உங்களது பிரதேசங்களில் இடம்பெறும் செய்திகளையும்
எமது மின்னஞ்சல் ஊடாக எமக்கு அனுப்பி வைக்க முடியும்.

editor.uthayam@gmail.com

## ஜே.வி.பி யின் கிழக்கு வாசல்

# தனித்துவ அரசியல் தனிமைப்படுமா?



சுஐப் எம்.காசிம்



தேசிய மக்கள் சக்தியின் கூட்டங்கள் கிழக்கில் களைகட்டுவது முஸ்லிம் தலைமைகளின் பலவீனத்தைக் காட்டுவதாகக் கருத முடியுமா? முஸ்லிம் தலைவர்களை கடுமையாக விமர்சிக்கும் அனுரகுமார திஸ ாநாயக்கவின் உரைகள் அங்கு உன்னிப்பாக நோக்கப்படுகிறது. மாறி மாறி முதலாளித்துவ அரசுகளுக்கு சேவகம் செய்த முஸ்லிம் தலைமைகள், இன்னும் ஏமாற்று அரசியலுக்கே முயல்வதாகச் சாடுகிறது தேசிய மக்கள் சக்தி. இதற்கு எதிராக கட்சி விசுவாசிகள் குரல் கொடுக்கவில்லை. அஷ்ரஃபின் காலத்தில் முஸ்லிம் தனித்துவத்தின் கோட்டையாகத் திகழ்ந்த கிழக்கு, இன்று கதவுகள் திறந்த வீடாக மாறி விரும்பியோர் வந்துபோகும் உறைவிடமாக உள்ளது. தனித்துவ தலைமைகளின் ஆளுமைகளுக்கு விழுந்த பலத்த அடியிது.

தேர்தல் காலம் நெருங்கிவரும் நிலையிலும் முஸ்லிம் கட்சிகள் இந்த அந்நிய கட்சிகளின் ஊடுருவலை கண்டுகொள்ளவில்லை. சுய மோதல்கள் முடிவுறாத நிலையில், மாற்றுக் கட்சிகளின் காலூன்றல்களை கண்டுகொள்ளும் மனநிலையில் இக்கட்சிகள் இல்லை. எம்.பிக்களை கட்டுப்படுத்த முடியாதமை, பாராளுமன்றத்தில் பகை தீர்க்கும் அரசியலில் ஸ்ரீலங்கா முஙலிம் காங்கிரஸூம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸூம் மோதிக்கொண்ட சம்பவங்கள் எல்லாம் நடுநிலை வாக்களார்களின் சிந்தனைகளைக் கிளறத் தொடங்கியுள்ளன. இதனால், கிழக்கில் வேறு கட்சிகள் எதைச் செய்தாலும் தேர்தல் காலத்தில் நம் கைகளே ஓங்குமென கணிக்க முடியாதுள்ளது. இப்படிக் கணிக்கப்பட்ட அல்லது கருதப்பட்ட காலம் இன்றில்லை. இதை, முஸ்லிம் தலைமைகள் புரிவது அவசியம்.

விடுதலை அரசியல் தோற்றுப்போனதால் தனித்துவ அரசியலிலும் தேய்வு ஏற்பட்டுள்ள சூழலிது. இந்நிலையிலும், தோல்வி அரசியலில் துளிர்க்கவே தமிழர் தரப்பு முயற்சிக்கிறது. இந்த தைரியம் முஸ்லிம் தலைமகளிடம் இல்லை. உரிமை அரசியல், அபிவிருத்தி அரசியலாக கீழிறங்கியமைக்கு தலைமைகளைக் குறைசொல்ல முடியாதுதான். ஆனாலும், காணிப் பிரச்சினைகளுக்காவது இந்தத் தலைமைகள் ஒன்றுபடுவதாக இல்லை. ஒலுவில் பொன்னன்வெளி கிராமம் அஷ்ரஃபால் 1997இல் மீட்கப்பட்ட பேரம்பேசும் அரசியல் பலம் இன்றில்லை. இதனால், காணி மீட்பு விடயத்திலாவது முஸ்லிம் தலைமைகள் ஒன்றிணைவது அவசியம். வட்டமடுக்காணி, பொத்துவில் முஹூது விகாரை விவகாரம் உள்ளிட்ட முஸ்லிம்களின் வாழ்வியல் பூர்வீகங்களைப் பாதுகாக்க என்ன வழியென முஸ்லிம் சமூகத்தில் அலசப்படுகிறது. இதுவரைக்கும் இந்த வழிகள் வெல்லப்படாதமை, அபிவிருத்தி அரசியலையாவது செய்யும் அளவுக்கு அரசியல் பலம் இல்லாதமை எல்லாம், முஸ்லிம் அரசியலின் இயலாமையாகவே நோக்கப்படுகிறது.

அரசாங்கத்தை ஆதரிக்கும் தேசிய காங்கிரஸால் கூட சாதிக்குமளவு நிலைமைகள் இல்லை. இவற்றையே, அனுரகுமார திஸாநாயக்க நன்றாகப் பயன்படுத்துகிறார். அண்மைய ஆய்வுகள், தேசிய மக்கள் சக்தியின் வளர்ச்சி 20 வீதத்தால் உயர்ந்துள்ளதை காட்டுகிறது. நாட்டின் எந்தப்பாகத்தில் இந்த அதிகரிப்பு என்பது தெரியவில்லை. ஒருவாறு கிழக்கில் அதிகரித்திருந்தால், முஸ்லிம் தலைமைகளின் பிரதிநிதித்துவத்துவமே பாதிக்கப்படும்.

தேசிய தேர்தல்களுக்கு சகல கட்சிகளும் தயாராக நேரிட்டுள்ள நிலையில், முஸ்லிம் அரசியலும் ஆரூடங்கள், ஐதீகங்களை நம்பியா களங்குதிக்கப்போகின்றன? அல்லது ராஜபக்ஷக்களை எதிர்க்கும் களத்திலேயா குதிக்கப்போகின்றன? எவற்றுக்கும் பதிலளிக்க முடியாதவாறுதான் நிலைமைகள் நீள்கின்றன. ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையில் ஒரு கூட்டு அமைந்து, ராஜபஷக்களின் வழி நடத்தலில் ஒரு கூட்டும் சஜித் தலைமையில் இன்னொரு அணியும் களமிறங்கினால், நிச்சயம் முஸ்லிம் தலைமைகளின் நிலைமை பரிதாபமாகவே அமையும். இந்த முக்கூட்டுக்களால் நாடிபிடித்தறியும் நிலைமைகளும் இல்லாமலாகலாம். இவ்வாறின்றி பாராளுமன்றத் தேர்தல் நடந்தால் கள நிலைமைகள் இதைவிடவும் சிக்கலாகும்.

தேசிய கட்சிகளின் ஒத்துழைப்பின்றி தனித்துப் போட்டியிட்டு கிழக்கில் எம்.பிக்களைப் பெறுவது இயலாமலாகியுள்ளது. அதிலும், அம்பாரை மாவட்டத்தில் இது துளியும் சாத்தியப்படாது. இம்மாவட்டத்தைப் பொறுத்தவரை முஸ்லிம் தலைமைகளின் முதுகெலும்புகள் இங்கேயே உள்ளன. இதனால், மும்முனைப் போட்டிகள் உச்சமடைந்து பிரதிநிதித்துவங்கள் பறிபோகலாம்.

இம்மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி ஒரு எம்.பியைப் பெறாவிடினும், முஸ்லிம் தலைமைகளின் வாக்குகளில் சிதைவை ஏற்படுத்தி பிரதிநிதித்துவத்தை இழக்கச் செய்யலாம். இவற்றைப் போக்க விழுப்பு, விவேகம் மற்றும் விட்டுக்கொடுப்புக்களுடன் முஸ்லிம் தலைமைகள் பணியாற்றுவதைத் தவிர வேறு வழிகள் இல்லாமலேயாகவுள்ளன.



# பேருவளை சீனன்கோட்டையில் 49 வருடங்களாக இயங்கி வரும் வாலிபர் ஹழரா ஜமாஅத்தின் 42 வது வருட மீலாத் விழாவும், பிரமுகர் கௌரவிப்பும்

(பீ.எம்.முக்தார்)

பேருவளை சீனன்கோட்டையில் 49 வருடங்களாக இயங்கி வரும் வாலிபர் ஹழரா ஜமாஅத்தின் 42 வது வருட மீலாத் விழாவும், பிரமுகர் கௌரவிப்பும் மற்றும் பரிசளிப்பு விழா (4-11-2023) அல்-ஹுமைஸரா தேசிய பாடசாலையின் எஸ்.எம். ஜாபீர் ஹாஜியார் மண்டபத்தில் நடைபெற்றது.

சீனன்கோட்டை பள்ளிச் சங்கத் தலைவர் ஏ.எச்.ஏ.முக்தார் ஹாஜியார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் அஸ்ஸெய்யித் அலிஸாஹிர் மௌலானா பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இலங்கைக்கான பாலஸ்தீன தூதுவர் கலாநிதி ஸுஹைர் முஹம்மத் ஹம்தெல்லாஹ் செய்ட் கௌரவ அதிதியாகவும் மற்றும் சிறப்பதிதிகளாக லீடர்ஷிப் சர்வகலாசாலை ஸ்தாபகர் கலாநிதி ரயிஸ் மீரா, பாலஸ்தீனத்துக்கான முன்னாள் இலங்கை தூதுவர் பவ்ஸான் அன்வர், கொழும்பு தெவட்டகக பள்ளி மற்றும் சூபி தரீக்கா நிறைவேற்றுக் குழு உறுப்பினர் ரியாஸ் ஸாலி, ஈ.ஜீ.எல் இரத்தினக்கல் ஆய்வுகூட தலைவர் எம்.ரி.எம்.ஹாரிஸ், ஸீ.ஜீ.எல் இரத்தினக்கல் ஆய்வுகூடதலைவர் மதனி நஜிமுத்தீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வாலிபர் ஹழரா ஜமாத்தின் தலைவர் இமாம் ஹஸன் முர்ஸி வரவேற்புரை நிகழ்த்தினார்.

சன்மார்க்க அறிவுப் போட்டிகளில் பங்கு பற்றிய மாணவர்களின் நிகழ்ச்சிகளும் இங்கு மேடையேற்றப்பட்டதோடு பாலஸ்தீன மக்களுக்காக விஷேட பிராத்தனையும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

சீனன்கோட்டை பள்ளிச் சங்கத்தின் கீழ் இயங்கும் குர்ஆன் மத்ரஸாக்களைச் சேர்ந்த வெற்றியீட்டிய மாணவ மாணவிகளுக்கு தங்க நகை உள்ளிட்ட பரிசில்களும் சன்றிதழ்களும் அதிதிகளால் கையளிக்கப்பட்டன.

போட்டியிட்ட மதரஸாக்களில் அதிகூடிய 92 புள்ளிகளைப் பெற்ற அக்கரகொட தாஜு/ல் மபாஹிரிய்யா குர்ஆன் மதரஸா முதலிடம் பெற்று வெற்றியீட்டிக் கொண்டது. குட்டி மலை ஜலாலியா குர்ஆன் மதரஸா 66 புள்ளிகளோடு இரண்டாம் இடத்தையும்,சமகிபுர யாக்கூத்தியா குர்ஆன் மதரஸா 30 புள்ளிகள் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

தேசிய பரீட்சைகளில் திறமை, ஆற்றல்களை வெளிக்காட்டிய இப் பிரதேச மாணவ,மாணவிகள் பலருக்கும் கேடயங்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வாழிபர் ஹழரா ஜெமாத் செயலாளர் டாக்டர் முர்ஷித் ரிஸாம் நன்றியுரை வழங்கினார்.

சீனன் கோட்டை பள்ளிச் சங்க உப தலைவர் அல்-ஹாஜ் முஸ்தாக் ஜாபிர் இணைச் செயலாளர்களான எம்.எம்.எம். சிஹாப் ஹாஜியார்,ரம்லான் அரூஸ், இணைப் பொருளாளர்களான ஸப்வான் நயீம்,ஏ.இஸட்.எம். ஸவாஹிர் ஹாஜியார், உறுப்பினர் இஸ்ஸத் தவாஹிர்,அல்-ஹுமைஸரா தேசிய பாடசாலையின் அதிபர் எம்.ஸி.இப்ராஹீம், உப அதிபர் நைஸர் தாஹா, அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் பொருளாளர் கலாநிதி அஸ்வர் அஸாஹிம் (அல்-அஸ்ஹரி) கலீபா மௌலவி எம்.ஐ.எம் ரபீக் (பஹ்ஜி), குர்ஆன் மதாரிஸ் பணிப்பாளர் மௌலவி பஹ்ருத்தீன் (மிஸ்பாஹி) முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் இப்திகார் ஜெமீல், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம்.அஸ்லம், களுத்துறை உதவி பொலீஸ் அத்தியட்சகர் துமிந்த ராஜபக்ஷ, பேருவளை பொலீஸ் நிலைய பொதுப்பதிகாரி லலித் பத்மகுமார, உட்பட பலரும் விழாவில் கலந்து கொண்டனர்.

அதிதிகள் அனைவருக்கும் ஹழரா ஜெமாத் சார்பாக நினைவுக் கேடயம் வழங்கப்பட்டது.
















































## மலையக...

(முன் பக்கத் தொடர்ச்சி)

எனும் தொனிப்பொருளில் (24) நுவரெலியாவில் நடத்திய வரலாற்று சிறப்பு மிக்க மாநாட்டில் கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஆற்றிய உரை,

மலையக மக்களின் 200 ஆண்டு சிறப்புமிக்க வரலாற்றையும் பரிசுத்தமான பாரம்பரியத்தையும் வீ. இராதாகிருஷ்ணன் எம்.பி தலைமையில் கொண்டாடும் இந்த நிகழ்வுக்கு எனது பாராட்டுக்களை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

உண்மையில் கூறப்போனால் மிகவும் துன்பகரமான வாழ்க்கையை வாழ்ந்து இந்நாட்டுக்கு அந்நிய செலாவணியை தேடி தந்து பலம் சேர்க்கும் மலையக மக்களுக்கு மனப்பூர்வமான நன்றிகளையும் கௌரவத்தையும் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இலங்கையில் வாழும் அனைவரும் சமமானவர்கள். சமமான முறையில் அனைத்து பிரஜைகளையும் கவனிக்க வேண்டும் என்று எமது அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளது. அரசியலமைப்பில் அவ்வாறு கூறப்பட்டாலும், யதார்த்தத்தில் மலையக தோட்ட தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய அந்தஸ்து, மரியாதை, பலம் இன்னமும் கிடைக்கவில்லை என்பதே எனது கருத்தாகும்.

மலையக மக்களுக்கான பிரஜாவுரிமையை முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்களே வழங்கினார்கள் என்பதை இங்கு நான் கூற விரும்புகிறேன். எதிர்காலத்தில் அமையப்போகும் எமது ஆட்சியிலும் மலைய தோட்ட தொழிலாளர்களுக்கு வாழ்வதற்கான அனைத்து உரிமைகளை பெற்று தந்தே தீருவோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

விசேடமாக, மலையக மக்களை தொழிலாளர் பிரஜைகளாகவே அடையாளப்படுத்துகின்றனர். எனினும் மலையக மக்கள் தொழிலாளர்களாகவே இருக்காமல், தேயிலை உற்பத்தி துறையின் தொழில் முயற்சியாண்மை உடையவர்களாகவே நாம் அடையாளம் காண்கிறோம். அதுவும் சாதாரண முயற்சியாண்மை உடையவர்களாக அன்றி, தனக்கென சொந்தமான காணியில் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களாக மாற்றும் புரட்சியை எமது ஆட்சியின் முதல் நாளில் இருந்தே ஆரம்பிப்போம்.

லயன் அறையில் வாழ்க்கையை நடத்திகொண்டும், குறைந்தளவிலான கல்வி மற்றும் சுகாதார வசதிகளை கொண்டும் மிகவும் கஷ்டமான துயர வாழ்க்கையை மலையக தோட்ட தொழிலாளர்கள் நடத்தி வருகின்றனர். மலையக மக்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுப்பதற்கான காலம் உதயமாகியுள்ளது. பேசியது போதும் செயல்வடிவமே தற்போது எமக்கு அவசியமாக உள்ளது.

எமது ஆட்சியின் முதலாவது காலப்பகுதியில் காணி உரித்துரிமையை கொண்ட, பொருளாதார பலம் கொண்ட, கல்வி மற்றும் சுகாதார வசதிகளை பெற்ற, அனைத்திலும் இயலுமையை கொண்ட, கௌரவமான வாழ்க்கையை மலையக மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கான பயணத்தை ரணசிங்க பிரேமதாச அவர்களின் நாமத்தின் கீழ் ஆரம்பித்து செய்துகாட்டுவோம் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் கூறவிரும்புகிறேன்.

வீ.இராதாகிருஷ்ணன் தலைமையில் மலையக தோட்ட தொழிலாளர்களின் 200 வருட சிறப்புமிக்க வரலாற்றை கொண்டாடும் இவ்வேளையில், எமது ஆட்சி வருவதற்கு முன்னர் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு மலையக மக்களுக்காக மூச்சு (ஹுஸ்ம) மற்றும் பிரபஞ்சம் (சக்வல) திட்டங்களின் ஊடாக பாடசாலைகளை கட்டியெழுப்பி, சுகாதார துறையின் பிரச்சினை தீர்த்து மலையக மக்களின் உரிமைகளை பலப்படுத்துவோம் என்ற உறுதியை வழங்கி எனது பேச்சை நிறைவு செய்கிறேன்.



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist,
Chennai -
Tamilnadu, India)

# இந்தியாவில் வலுப்பெறும் இந்துத்துவா தேசியவாதம்!

இந்தியாவில் இந்துத்துவ சக்திகளின் வளர்ச்சி என்பது முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவ சிறுபான்மையினருக்கு மற்றும் உண்டான மிரட்டல் அல்ல மாறாக ஒட்டு மொத்த இந்திய சமூகத்திற்கான அச்சுறுத்தலாகவே நாம் இதனை பார்க்க முடிகிறது. இந்தியா இது வரை பல்வேறு துறைகளில் அபாரமாக வளர்ந்து சாதனைகள் செய்தது மட்டுமல்லாமல் 4 பில்லியன் பொருளாதாரத்தை தன்னகத்தே கொண்டுள்ள பொருளாதார சக்தி என்பதில் எந்த ஐயமும் இல்லை.. இத்தனை துறைகளிலும் இந்தியா விடுதலைக்கு பிறகு இந்த மாபெரும் வளர்ச்சிக்கு காரணமாக அமைந்தது அதன் மதச்சார்பற்ற தன்மை என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை என்பதே உண்மையாகும்.

இந்தியா என்றாலேடிரசயடளைஅ (முச ) ளநஉரடயசளைஅ என்று தான் உலகம் இதுவரை புரிந்து வைத்து இருந்தது. இந்த பன்முகத்தன்மை கொண்ட ஜனநாயக தேசத்தின் மிகப்பெரிய வலிமையான வளர்ச்சி என்பது அதன் பன்முகத்தன்மையின் அடிப்படையில் தான் அமைந்தது. ஆனால், இன்று அதன் பன்முகத்தன்மைக்கு மிகப் பெரிய அளவில் அச்சுறுத்தல் வந்துள்ளது . இந்த அச்சுறுத்தல் வெற்றி பெற்று விடும் என்பதை போலான உருவகங்கள் காட்சிப்படுத்தப்படும் சூழலில் இது இந்தியா என்கிற அமைதி தேசத்திற்கு எந்த நிலையிலும் நல்ல செய்தி இல்லை என்பதை நாம் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

மதச்சார்பற்ற ஒரு தேசத்தின் மீது மதவாதம் என்கிற கொடூரமான எண்ணங்களை பாய்ச்சுவது மிகுந்த ஆபத்தான நிலையை ஏற்படுத்தி விடும் என்று இந்தியாவில் உள்ள கோடானுகோடி மக்கள் அச்சப்படும் நிலை காணப்படுகிறது. இந்த கோடானுகோடி இந்திய மக்களிடையே சமத்துவம் மற்றும் இன இழிவுகளுக்கு எதிரான மனநிலை வலிமையாக காணப்படுகிறது .இந்த வலிமையான மனநிலை கொண்ட மக்களின் மன நிலையை அச்சுறுத்தும் செயல்பாடுகளை தான் இந்துத்துவ அடிப்படை அமைப்புகள் தொடர்ந்து செய்து வருகிறது.

இந்துத்துவம் அது தோன்றிய காலத்திலிருந்தே வெளிநாட்டு பாசிஸ்ட் மற்றும் சியோனிஸ்ட் பயங்கரவாத அமைப்புகளுடன் மிக நெருக்கமான உறவைப் பேணி வருகிறது.

தொடக்க கால ஆர்எஸ்எஸ் அமைப்பு முசோலினி, ஹிட்லர் போன்றோருடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டிருந்தது. அதன் நிறுவனர்களில் ஒருவரான டாக்டர் மூஞ்சே இத்தாலி சென்று முசோலினியைச் சந்தித்து, அவருடைய பாணியில் தங்கள் அமைப்பை அமைத்துள்ளதாகச் சொல்லியதையும் முசோலினியின் பாசிச அறிக்கையை இந்தியில் மொழிபெயர்த்து வெளியிட்டதையும் நாம் அறிவோம்.

இந்துக்களும் யூதர்களும் மதச்சார்பின்மை, ஜனநாயகம் முதலான நவீன சிந்தனைகளால் பாதிக்கப்பட்டவர்கள் எனச் சொல்லும் இந்த சியோனிச ஆதரவு இந்துத்துவ சக்திகள், மீண்டும் இந்துப் பெருமையை நிலைநாட்டுவதற்கு யூத பயங்கரவாத அமைப்புகளுடன் இணைந்து செயல்பட வேண்டும் என வெளிப்படையாகச் சொல்கின்றன.

அந்த அடிப்படையில் அவர்கள் மேற்கொண்டுள்ள அச்சமூட்டும் இயக்கச் செயற்பாடுகளையும், இந்தியாவில் இயற்கைப் பேரழிவுகள் ஏற்படும்போதெல்லாம் நிவாரணப் பணிகளுக்கென வெளிநாடுகளில் திரட்டப்படும் ஏராளமான நிதி, இங்கு இந்துத்துவ வன்முறை அமைப்புகளுக்கு எவ்விதம் பிரித்தளிக்கப்படுகின்றன என்பதையும் விரிவான ஆதாரங்களுடன் முன்வைக்கிறார் இந்திய அறிவு சார் எழுத்தாளர் பேராசிரியர் டாக்டர் மார்க்ஸ்.

இந்தியாவை வலிமையான இந்துத்துவ தேசமாக உருவாக்கும் நோக்கில் தான் சு ளு ளு அமைப்பு 1925 ஆண்டு உருவாக்கப்பட்டது.இதன் அடிப்படை என்பதே இந்திய முஸ்லிம்களுக்கு எதிரான மனநிலை வளர்ப்பு என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

ஆர் எஸ் எஸ் அமைப்பின் பிதாமகன் கோல்வால்கர் மற்றும் சாவர்க்கர் ஆகியோர் இதற்கு வலுவான தளத்தை அமைத்து கொடுத்தனர். இந்தியாவில் செயல்படும் ஆர் எஸ் எஸ் அமைப்பு முழுமையாக பிராமண சனாதன தர்மத்தின் அடிப்படையில் தான் செயல்பாடுகளை உருவாக்கி உள்ளது. இந்த சித்பவ பிராமண அடிப்படை தத்துவம் பிறப்பில் பிராமணர்கள் தான் உயர்ந்தவர்கள் என்கிற தத்துவத்தை உள்வாங்கி செயல்படுகிறது. அதேநேரத்தில் யூத சியோனிசம் இதே தத்துவத்தை தான் பின்பற்றுகிறது. தேவன் தனக்குரிய சமூகமாக இஸ்ரேவேலர்களை மட்டுமே படைத்தார் என்கிற தத்துவம் தான் அதுவாகும்.பிறப்பில் தாங்களே உயர்ந்தவர்கள் என்கிற யூத மத தத்துவமும், இந்துத்துவ பிராமண தத்துவமும், ஜெர்மனியின் நாஜிக்கள் ஆகிய. மூன்றுமே ஒட்டு மொத்த மனித குலத்தின் விரோதமானது என்பதை அறிந்து கொள்ள நமக்கு அதிக காலம் தேவையில்லை என்பதே பொதுவான உண்மையாகும்.

பாகிஸ்தான் பிரிவுக்கு முன் இந்தியா ஒருங்கிணைந்த தேசமாகவே இருந்தது.அந்த காலகட்டத்தில் ஏராளமான இந்து, முஸ்லிம் வன்முறைகள் நடந்துள்ளது. அதற்கு பிறகு இந்தியாவில் ஏராளமான வன்முறைகள் இன்று வரையில் திட்டமிடல் அடிப்படையில் தான் கட்டமைக்கப்பட்டு வருகின்றது. மார்ச் 8, 1947 அன்று, டெல்லி மாகாணத்தின் ஆர்எஸ்எஸ் ஊழியர்களின் பேரணி நடைபெற்றது. சுமார் 100,000 தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர். தலைமை விருந்தினராக கலந்து கொண்ட எம்.எஸ்.கோல்வால்கர், “ஒவ்வொரு இந்துவும் தனது மதத்தைப் பாதுகாப்பது கடமை“ என்று கூறினார். இப்போதே நமக்கு புரியும் ஆர் எஸ் எஸ் அமைப்பின் அடிப்படை தத்துவம் என்பதே முஸ்லிம்கள் மீதான வெறுப்பு என்பதில் எந்த ஐயமும் இல்லை. இந்த வெறுப்பின் மீது கட்டமைக்கப்பட்ட அரசியல் தான் தற்போது இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இந்தியா என்கிற தேசத்தை உருவாக்க காந்தியடிகள் தலைமையில் ஆன காங்கிரஸ் கட்சி மிகுந்த பெரிய தியாகங்களை செய்தது. அதே நேரத்தில் மஹாத்மா காந்தியின் ஆதரவு முஸ்லிம்களுக்கு இணக்கமாக இருந்ததை அன்றைய ஆர் எஸ் எஸ் அமைப்பின் இந்து அடிப்படை சனாதன வாதிகள் விரும்பவில்லை.

எப்போதும் மேலாதிக்க மனநிலை கொண்ட சித்பவ பிராமண குடும்பத்தில் பிறந்த கோல்வால்கர் இதே மனநிலை கொண்ட எண்ணங்களுடன் தனது அமைப்பை வலுப்படுத்த முயன்றார். அதற்கு அவர் எடுத்து கொண்ட தந்திரோபாய நடவடிக்கை தான் இந்து ஒற்றுமை என்கிற ஒற்றை சொல்லை பயன்படுத்தினார். இது இந்தியா முழுவதும் 3 மூ வாழும் உயர் சாதி பிராமணர்களுக்கு எல்லா வகையிலும் வாய்ப்பாக அமைந்தது என்பதே யதார்த்தம் நிறைந்த உண்மையாகும். இந்த வெறுப்பின் விளைவாகவே வெறியூட்டப்பட்ட இந்து பிராமணரான கோட்சே தான் அண்ணல் காந்தியை படுகொலை செய்தார் என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது. இந்த படுகொலை இந்திய தேசம் முழுவதும் மிகப்பெரிய அளவில் அதிர்வலைகளை உருவாக்கிய நேரத்தில் ஆர் எஸ் எஸ் அமைப்பு தனக்கும் இது படுகொலைக்கும் எந்த விதத்திலும் சம்பந்தம் இல்லை என்று மெதுவாக தழுவிக்கொண்டது என்பதே உண்மையாகும். ஆனாலும், இந்த பழி,பாவம் இன்றளவும் ஆர் எஸ் எஸ் அமைப்பை சுற்றி வந்து கொண்டேயிருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.




இந்த நிலையில் தான் சு ளு ளு அமைப்பு இந்திய அரசியலில் கால்பதித்து அதிகாரத்தை சுவைக்க எண்ணியது. அதன் விளைவாக உருவான அமைப்பு தான் ஜனசங்கம் .1952 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் போட்டியிட்டு பாரதிய ஜனசங்கம் 3 இடங்களில் வென்றது. 1962 ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் 14 இடங்கள் வெற்றி பெற்ற பாரதிய ஜனசங்கம், 1967 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலின்போது 35 இடங்களில் வென்றது.1971 இல் நடந்த பொதுத்தேர்தலில் 22 இடங்கள் வென்றது பாரதிய ஜன சங்கம். இந்தத் தேர்தலில் இந்திரா காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைத்தது.

இந்த நிலையில், புதியதாக ஒரு அமைப்பு தேவைப்பட, ஏப்ரல் 6ஆம் தேதி 1980ஆம் ஆண்டு பாரதிய ஜனதா கட்சியை தோற்றுவித்து, நிறுவன தலைவராகவும் தேர்வு செய்யப்பட்டார் அடல் பிகாரி வாஜ்பேயி.

அடுத்த நடந்த 1989 பொதுத்தேர்தலில் பாஜக, சித்தாந்தங்களுக்கு நடவடிக்கை வடிவிலான உருவம் கொடுக்கத் தொடங்கியது. குறிப்பாக, அயோத்தி ராமஜென்ம பூமி விவாகரத்தை தீவிரமாகக் கையிலெடுத்தது. 1990 ஆம் ஆண்டு தனது முதல் ரத யாத்திரை பயணத்தை தொடங்கியது பாஜக. சோம்நாத்திலிருந்து அயோத்தி வரையிலான இந்த ரதயாத்திரை ஒருவழியாக வெற்றிபெற்றதைத் தொடர்ந்து 1992ஆம் ஆண்டு அடுத்த ரதயாத்திரைக்கு திட்டம் தீட்டப்பட்டது. ஆனால், அதிலிருந்துதான் இந்திய அரசியலின் நெடுங்கால விவகாரம் ஒன்று தொடங்கப்போகிறது என்பது அப்போது பலருக்கும் தெரியாது.

1992ஆம் ஆண்டு, டிசம்பர் 6 ஆம் தேதி. விஸ்வ இந்து பரிஷத்தின் (வி.எச்.பி) ஆர்வலர்கள் மற்றும் பாரதிய ஜனதா கட்சி மற்றும் அதனுடன் இணைந்த அமைப்புகளின் சில தலைவர்கள் சர்ச்சைக்குரிய இடத்தில் ஒரு பேரணிக்கு ஏற்பாடு செய்தனர். இதில் ஒன்றரை லட்சம் தொண்டர்கள் (கர சேவகர்கள்) கலந்து கொண்டனர். பேரணி பின்னர் வன்முறையாக மாறியது. கும்பல் அந்த பகுதியின் பாதுகாப்பை தன் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து, பாபர் மசூதியை இடித்தது.

ராம ஜென்ம பூமி பின்நாட்களில் வடஇந்திய அரசியலில் வாக்குறுதிகளாகவும் தேர்தல் அறிக்கைகளாகவும் கூட மாறியது.

பாரதிய ஜனதா கட்சி 1992 ம் ஆண்டு பாபாரி மஸ்ஜித் இடிப்பு நடத்திய பிறகு வட இந்திய அரசியலில் மிகப் பெரிய அளவில் சித்தாந்த ரீதியான வெறுப்பு அரசியலை முன்னெடுத்துச் செல்ல அது மிகப் பெரிய அளவில் அவர்களுக்கு தேர்தலில் வெற்றியை ஈட்டித் தந்தது . 1992 ஆண்டு பாபரி மஸ்ஜித் இடிப்பு நடந்த பிறகு நாடு முழுவதும் நடைபெற்ற கலவரத்தில் வட இந்திய மாநிலங்களில் ஏராளமான முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.இந்த படுகொலைகளை இந்துத்துவ சக்திகள் தான் முன்னெடுத்துச் செல்ல முதன்முதலாக சர்வதேச அளவில் இந்த பிரச்சினை கவனத்தை பெற்றது. அதற்கு பிறகு 2000ம் ஆண்டுகளுக்கு பிறகு குஜராத் மாநிலத்தின் முதல்வராக பதவியேற்ற நரேந்திர மோடி அரசு அந்த மாநிலத்தில் தீவிர இந்துத்துவா கருத்தியல் ரீதியான வெறுப்பு அரசியலை முன்னெடுத்துச் செல்ல அரசியல் ரீதியாக பாரதிய ஜனதா கட்சிக்கு மிகுந்த வெற்றியை பெற்றது. இந்த கருத்தியல் ரீதியான அரசியல் வெற்றி குஜராத், உத்திரப்பிரதேசம், இமாச்சலப் பிரதேசம், மத்திய பிரதேசம், பீஹார், மஹாராஷ்டிரா, ராஜஸ்தான், டெல்லி, உத்ராஞ்சல், ஜார்கண்ட், ஹரியானா என்று வட இந்திய முழுமையாக தாக்கத்தை ஏற்படுத்தியது.

குறிப்பாக 2002, ம் ஆண்டு நடைபெற்ற குஜராத் மாநிலத்தில் கலவரங்களின் போது 3000 க்கு மேற்பட்ட அப்பாவி பொதுமக்களை இந்துத்துவ காடையர்கள் படுகொலை செய்தனர். இந்த படுகொலை மாடலை அவர்கள் நியாயப்படுத்தும் விதத்தில் நாடு முழுவதும் குஜராத் படுகொலையை நியாயப்படுத்தும் விதத்தில் வட இந்திய அரசியலில் மிகப் பெரிய அளவில் பாரதிய ஜனதா கட்சி வெற்றி பெற முடிந்தது. அமெரிக்கா போன்ற நாடுகள் குஜராத் மாநிலத்தின் முதல்வராக இருந்த நரேந்திர மோடி அமெரிக்கா வருவதற்கு தடை விதிக்க அப்போது தான் அது சர்வதேசத்தின் கவனத்தை முற்றிலுமாக பெற்றது. அதன் பின்னர் உத்திரப்பிரதேச மாநிலத்தில் மாநில தேர்தல்களில் வெற்றி பெற பாரதிய ஜனதா கட்சி அமீத் ஷா தலைமையில் இதே போன்ற யுக்தியை கையாண்டு மிகப் பெரிய அளவில் மாநில தேர்தல்களில் வெற்றி பெற்று வருகின்றது. தற்போது 2023, ம் ஆண்டு 3 மாநிலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் பாரதிய ஜனதா கட்சி மிகப் பெரிய அளவில் வெற்றியை ஈட்டித் மூன்றாவது முறையாக இந்தியாவில் ஆட்சியில் அமரக்கூடிய வகையில் வாக்காளர்கள் மத்தியில் மிகப்பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதை நாம் கவனிக்க கூடியதாக இருக்கிறது.

இந்த நிலையில் 2014 ம் ஆண்டு நடைபெற்ற இந்தியப் நாடாளுமன்ற தேர்தலில் நரேந்திர மோடியின் தலைமையில் ஆன பாரதிய ஜனதா கட்சி மிகப் பெரிய அளவில் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியை பிடித்தது. ஏற்கனவே குஜராத் மாநிலத்தில் நரேந்திர மோடி மற்றும் உள்துறை அமைச்சராக செயல்பட்ட அமீத் ஷா கூட்டணி இந்திய அரசியலில் மிகப் பெரிய அளவில் வெறுப்பு பேச்சை கட்டவிழ்த்து விட்டு வெற்றியை பெற்று வருகிறது . இந்தியாவை இந்து தேசமாக மாற்றப்படலாம் என்கிற அடிப்படையில் அவர்களின் செயல்பாடுகள் தீவிர தன்மையை தற்போது அடைந்துள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்து வருகின்றனர். இந்திய ஆட்சி முறையில் வளர்ச்சி அரசியலி எந்தவொரு பெரிய தாக்கத்தையும் பிரதமர் மோடியால் ஏற்படுத்த முடியாத சூழ்நிலையில் முஸ்லிம்களுக்கு எதிரான அரசியல் நடவடிக்கைகள் வாக்காளர்கள் மத்தியில் மிகுந்த இலாபத்தை ஈட்டி தருகிறது.

குறிப்பாக ராமர் கோயில் பிரச்சினை, காஷ்மீர் 370 சிறப்பு அந்தஸ்து, பொது சிவில் சட்டம் போன்ற விவகாரங்களில் பாரதிய ஜனதா கட்சி தீவிர தன்மையுடன் வெற்றி பெற்றுள்ளது. 400, ஆண்டுகளாக கட்டப்பட்டு இருந்த ஒரு மஸ்ஜிதில் தான் இராமர் பிறந்தார் என்று அதனைத் முழுமையாக தகர்த்து எறிந்து விட்டு அங்கே பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை செலவழித்து கோயில் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் வரும் 2024ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அந்த கோயில் தரிசனத்திற்கு திறக்கப்பட உள்ளது. அதேநேரத்தில் காஷ்மீர் மாநிலத்தில் பெரும்பாலான முஸ்லிம்கள் வாழும் சூழலில் 370 சட்டத்தின் மூலம் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட விசேட சலுகைகளை நீதிமன்றம் தீர்ப்பு மூலம் முழுமையாக ரத்து செய்துள்ளது மோடி அரசு. தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சியில் இருந்து வரும் மோடியின் செல்வாக்கு மூன்றாவது முறையாக ஆட்சியை பிடிக்கும் அளவுக்கு வளர்ந்து இருப்பதற்கு மிகவும் முக்கியமான காரணம் இந்திய அரசியலில் தீவிர இந்துத்வா கருத்தியல் அரசியல் தான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்பதே உண்மை.

இந்துத்துவ தீவிர அடக்குமுறை மற்றும் அதிகார மமதை காரணமாக வட இந்திய மாநிலங்களில் பிஜேபி மிகுந்த செல்வாக்குடன் பவனி வருவதை நாம் தெளிவாக காணக்கூடியதாக இருக்கிறது.

சு ளு ளு அமைப்பை தாய் அமைப்பாக கொண்ட பாஜக இந்தியாவில் ஆட்சியில் தற்போது இருந்து வரும் நிலையில் தேர்தல் வெற்றியை கணக்கில் கொண்டு முஸ்லிம்களை இந்திய பொது சமூகத்தின் மத்தியில் மோசமானவர்களாக சித்தரித்து கடும் போக்கு அரசியலை பாரதிய ஜனதா கட்சி முன்னெடுத்துச் செல்கிறது.

உயர் சாதி பிராமணர்களுக்கு கட்சியான பாரதிய ஜனதா கட்சி தாழ்த்தப்பட்ட தலித்துகள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இடைநிலை சாதியினரை தமக்கானவர்களாக அரசியல்படுத்த ஆரம்பித்து அதில் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்று வருகிறது . இந்திய இந்து சமூகத்தின் மத்தியில் இந்திய முஸ்லிம்களை இந்திய தேசத்தின் எதிரிகளாகவே சித்தரிக்கும் வேலையை தொடர்ந்து கச்சிதமாக செய்து வருகிறது. இந்தியாவில் வேலையின்மை, நீதி மன்ற மரபுகள், அந்நிய முதலீடுகள், சிறு, குறு தொழிற்சாலைகளின் வீழ்ச்சி, அமெரிக்கா டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி, கார்ப்பரேட் நிறுவனங்களுக்கான வரி விதிப்புகளில் சலுகைகள் மற்றும் பல்வேறு வடிவங்களில் பிரச்சினைகள் இருந்த போதிலும் மோடியின் தலைமையில் ஆன பாரதிய ஜனதா கட்சி இந்துத்துவ சிந்தனை மற்றும் வெறுப்பு அரசியலை முன்னெடுத்துச் செல்லும் நிலையில் தேர்தல் அரசியலில் பாரதிய ஜனதா கட்சி தொடர்ந்து வெற்றி பெற்று வருவதை காண கூடியதாக இருக்கிறது.

இந்திய முஸ்லிம்கள் எண்ணிக்கையில் 22 சதவீதமாக வளர்ச்சி அடைந்துள்ள போதிலும் சாமானிய இந்துக்கள், சீக்கியர்கள், கிறிஸ்தவர்கள், தலித்துகள், பார்சி மற்றும் ஏனைய இந்திய சமூகம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டு வருவதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது. பல ஆயிரக்கணக்கான தொடரும் இந்த சிறப்பான உறவை கெடுக்கும் வகையில் தான் தற்போதைய இந்துத்துவ சக்திகள் திட்டமிட்டு அரசியல் நடத்தி வருவதை நாம் இங்கே சுட்டி காட்ட விழைகிறேன்.

வட இந்திய மாநிலங்களில் பசு இந்துக்களுக்கு புனிதமான ஒன்றாகும். வட இந்திய மாநிலங்களில் பசுவின் கோமியம், சாணம் போன்றவற்றை அவர்கள் புனிதமாக நேசித்து வருகின்றனர். இந்த நிலையில் இந்திய முஸ்லிம்கள் பசுமாட்டின் இறைச்சியை உண்ணும் உணவை தடை செய்ய வேண்டும் என்று இந்துத்துவ சக்திகள் மிகப் பெரிய அளவில் வன்முறையில் ஈடுபட்டு வருவதால் பல நூற்றுக்கணக்கான இஸ்லாமியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தென்னிந்திய முஸ்லிம்களை விட வட இந்திய முஸ்லிம்கள் பொருளாதாரத்தில் பின்னடைவை சந்தித்து வரும் நிலையில் அவர்களுக்கான தெளிவான அரசியல் தலைமை இல்லாததால் அவர்கள் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளனர். அதேநேரத்தில் பள்ளிகளில் முஸ்லிம் பெண் குழந்தைகள் ஹிஜாப் அணிந்து செல்ல கூடாது என்று கர்நாடக மாநிலத்தில் மிகப் பெரிய அளவில் போராட்டத்தில் இந்துத்துவ சக்திகள் ஈடுபட்டனர். பொது இடங்களில் வெள்ளிக்கிழமைகளில் தொழுகை நடத்த கூடாது, பள்ளிவாசல்களில் கூம்பு வடிவ குழாய்களை கட்டி அதான் கூற தொழுகைக்கு அழைக்க கூடாது என்று மிகப் பெரிய அளவில் இந்துத்துவ சக்திகள் வெறுப்பை உமிழும் நிலை தொடருகிறது. அதனைத் தாண்டி சமீபத்திய நாட்களில் சினிமா கதைகளின் மூலம் இஸ்லாமிய ஆட்சியாளர்களை கொடூரமான கொலையாளிகளை போன்று சித்தரிக்கும் வேலையில் கனகச்சிதமாக இறங்கி வருவதையும் நாம் காண முடிகிறது. இந்திய தேசம் முழுவதும் வாழும் இஸ்லாமியர்கள் ஜிஹாதி குழுக்களுடன் தொடர்பினை கொண்டவர்கள் என்பது போன்று பிரச்சாரம் செய்யப்பட்டு இந்து சமூகத்தின் மத்தியில் ஒரு வித பதட்டம் ஏற்பட்டுள்ளது. இது தான் பாரதிய ஜனதா கட்சி தொடர்ந்து வட இந்திய மாநிலங்களில் வெற்றி பெற்று வர காரணமாக அமைந்துள்ளது என்பதில் எந்த ஐயமும் இல்லை.

இதனை எதிர்த்து குரல் கொடுத்து வருகின்ற அளவில் வலுவான எதிர்க்கட்சிகள் இல்லாத நிலையில் மோடி மற்றும் இந்துத்துவ சக்திகள் தொடர்ந்து வெற்றி பெறுவது எல்லா வகையிலும் அவர்களுக்கு சாத்தியமாகி விடுகிறது.

தற்போது வட இந்திய மாநிலங்களில் 5 மாநிலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் பாரதிய ஜனதா கட்சி 3 மாநிலங்களில் ஆட்சியை பிடித்தது அவர்களுக்கு 2024 ம் ஆண்டு தேர்தலில் வலுவான வெற்றியை பெறலாம் என்கிற வலுவான நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் இந்தியா என்கிற அமைப்பின் கீழ் எதிர்கட்சிகள் ஒருங்கிணைந்த நிலையில் இன்னும் அவர்களிடம் ஒற்றுமையின்மை காணப்படுகிறது. வரும் 2024 ம் ஆண்டு இந்தியாவில் நடைபெறும் பொது தேர்தலில் பிரதமர் வேட்பாளர், தொகுதிகள் பங்கீடு போன்றவை இன்னும் முடிவாகத நிலையில் எதிர் கட்சிகளுக்கு பெருத்த பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

அடுத்த ஆண்டு 2024 ம் ஆண்டு இந்தியாவில் நாடாளுமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் மீண்டும் பாரதிய ஜனதா கட்சி இந்துத்துவ அரசியல் கட்சி வெற்றி பெற்றால் மிகவும் கடுமையான அளவுக்கு இந்துத்துவ சிந்தனை மற்றும் கொள்கைகள் முன்னெடுத்துச் செல்ல முயற்சிகள் நடைபெறும் என்பதில் எந்த சந்தேகமில்லை. ஒரு வேளை மிக கடுமையான மெஜாரிட்டி அடிப்படையில் பாரதிய ஜனதா கட்சி வெற்றி பெறும் பட்சத்தில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் மாற்ற ஏதுவான வழி வகையில் கூட ஈடுபடலாம் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க வாய்ப்பே இல்லை.

2025 ம் ஆண்டு ஆர் எஸ் அமைப்பின் அமைப்பு 100 ஆண்டுகள் நிறைவுற்ற கொண்டாட்டங்கள் வரும் நிலையில் இந்தியாவை இந்து இந்தியாகவே மாற்றம் செய்ய அதிக வாய்ப்பு உள்ளது. இதன் மூலம் பல்வேறு சட்ட திருத்தங்கள் கொண்டு வர முழுமையாக வாய்ப்பு உள்ளது. இந்த சட்ட திருத்தங்கள் மூலம் இந்தியாவில் வாழும் முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் அதிகரிக்கும் அதிக வாய்ப்புகள் உள்ளது. அடிப்படைவாத இந்துத்துவ சக்திகள் வலுப்பெறும் நிலையில் வெறுப்பு அரசியல் உச்சபட்ச நிலைக்கு செல்லும் போது அசாதாரண சூழ்நிலை உருவாகும் ஆபத்துக்கள் இருப்பதை நாம் மறுக்க முடியாது.

உண்மையில் இந்தியா என்பது இந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் இணைந்து வாழும் தேசம் என்பதில் எந்த ஐயமும் இல்லை . இந்த கூட்டு மனசாட்சியின் அடிப்படையில் உருவான இந்தியா மிகப் பெரிய அளவில் இணைந்து ஈடுபட்ட போராட்டத்தின் விளைவாகவே இந்த சுதந்திரத்தை இந்தியா பெற்றது. இந்திய முஸ்லிம்கள் இந்திய சுதந்திரத்திற்கு தனது மக்கள் தொகையை விட மிக அதிகமான அளவில் உயிர் தியாகம் செய்து பெற்ற இந்த தியாக வரலாற்றை முழுமையாக மறைத்து புதிய வரலாற்றை உருவாக்க இந்துத்துவ அமைப்புகள் முயன்று வருகின்றன. முஸ்லிம்களின் தியாகம், போராட்டம், சாதனைகள் இல்லாத இந்தியாவை நாம் கற்பனையில் கூட எண்ணிப்பார்க்க இயலாது என்பதே உண்மையாகும். நிச்சயமாக இந்த கடுமையான சூழல் இந்திய முஸ்லிம்களுக்கு ஒரு சோதனையான காலகட்டம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இந்த சோதனையான காலகட்டத்தில் இருந்து மீண்டு வலுவான இந்தியாவை இந்திய முஸ்லிம்கள் கட்டமைப்பு செய்வார்கள் என்கிற நம்பிக்கையை பெரும்பாலான மக்களுக்கு ஆறுதல் தரும் செய்தியாக உள்ளது என்பதே தற்போதைய நிலையாக உள்ளது....!

# பிட்டக்கோட்டையில் iking









ஆடை உற்பத்தி நிறுவனமான ஐகிங் நாட்டின் தலைநகரான பிட்டக்கோட்டையில் கால் பதித்துள்ளது.

பிடகோட்ட, பாகொட வீதி, 120ஆம் இலக்க ஐகிங் விற்பனை நிலையமொன்று அண் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

சந்தையில் கடந்த 15 வருட காலமாக கெஸியல் சேர்ட் களுக்குப் பிரபலமான ஐகிங் நிறுவனம் ஆண்களுக்குத் தேவையான சேர்ட் வகைகளுக்கான வடிவமைப்பினை நிறுவனத்தின் தலைவர் இஹ்ஸான் வாஹித் தயாரிக்கிறார்.

ஐகிங் லங்கா பிரைவேட் லிமிடெட்டின் ஆடை உற்பத்தி நிலையம் மாத்தறை உக்குவளையில் இயங்கி வருகின்றது.

சந்தையில் கெஸியல் சேர்ட் வகைகளுக்குப் பிரபலமான ஐகிங், காலத்துக்குக் காலம் புதுப்புது வடிவமைப்புகளை சேர்ட்களை சந்தைக்கு விடுவதாக அதன் தலைவரும் வடிவமைப்பாளருமான இஹ்ஸான் வாஹித் தெரிவித்தார்.

ஐகிங் நிறுவன உற்பத்திகளை நாடுமுழுவதிலுமுள்ள முன்னணி விற்பனை நிலையங்களில் பெறலாம்.

# மாநாட்டுக்கு தம்மிக்க 20 கோடி வைப்பு

## வஜீர அபேவர்தன தெரிவிப்பு

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் இரண்டாவது மாநாட்டுக்கு தனவந்தர் தம்மிகப் பெரேரா 200கோடி ரூபாவை வழங்கியதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜீர அபிவர்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களுடனான கலந்துரையாடலிலே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எம்.பி.க்கள் தம்மிக பெரேராவுக்கு வேட்பாளர் கரட்டினை வழங்கி பணம் பெற்றுள்ளார்கள் எனக் கூறுகின்றார்கள் எனவும் வஜீர அபேவர்தன தெரிவித்தார்.

பேராசிரியர் அசுமாரசிங்க மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியை வழங்கி ஜனாதிபதித் தேர்தலில் அபேட்சகராக்குவதாகத் தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

பஷில் ராஜபக்ஷ இதுவரை காலமும் வகித்த கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியை தம்மிகப் பெரேராவுக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

மொட்டுக் கட்சிக்குள் தற்போது ஜனாதிபதி அபேட்சகராக யாரை ஆதரிப்பது தொடர்பாக கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒருசாரார் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்றும் அதேநேரம் மற்றொரு சாரார் தம்மிக பெரேராவுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர். பஷில் ராஜபக்ஷ தம்மிக பெரேராவுக்கு ஆதரவு வழங்குவதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சி சார்பில் நான்கு அபேட்சகர்களுடைய பெயர்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அச்சந்தர்ப்பத்தில் யார் என்பதை தெரிவிப்போம் என்று மொட்டுக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

# ஊடகப் பயிற்சி பட்டறைக்கு விண்ணப்பம் கோரல்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் அநுராதபுரம், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் நடாத்தவுள்ள ஹுபைவையட ஆநனயை யுனஎழஉயஉல பயிற்சிப் பட்டறைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

20 - 30 வயதுக்கிடைப்பட்ட தமிழ் பேசும் இளம் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் டிஜிட்டல் ஊடகத்துறையில் ஆர்வமுடையவர்களும் விண்ணப்பிக்கலாம்.

எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமைக்குள் https://t.ly/PMz-7 என்ற முகவரியில் தங்களது விண்ணப்பங்களைப் பதிவு செய்யுமாறு விண்ணப்பதாரிகள் கேட்கப்பட்டுள்ளனர்.

# முஸ்லிம் சமூகம் சமய அறிவு சார்ந்த புத்திஜீவிகளை இழந்து வருவது கவலைக்குரியது

## அனுதாபச் செய்தியில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் தெரிவிப்பு

இலங்கையைப் பொறுத்தவரை கடந்த சில மாதங்களாக இஸ்லாமிய அறிவுசார் புத்திஜீவிகளை முஸ்லிம் சமூகம் அடுத்தடுத்து இழந்து வருவது ஆழ்ந்த கவலையளிப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

அனுதாபச் செய்தியொன்றின் ஊடாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த வாரத்தின் ஆரம்ப நாட்களிலேயே குர்ஆனிய சமூகத்தை உருவாக்குவதற்காக அயராது ஈடுபட்டுழைத்த இரு பெரும் ஆளுமைகள் இறைவனின் நாட்டப்படி எங்களை விட்டு மறைந்தது முஸ்லிம்கள் மத்தியில் அதிர்வலைகள்.

செவ்வாய்க்கிழமை(19) அதிகாலையிலேயே புத்தளம் இஸ்லாஹியா பெண்கள் அரபுக் கல்லூரியின் அதிபர் உஸ்தாத் ஷெய்க் முஹம்மத் முனீர் இவ்வுலக வாழ்வை நீத்து விட்ட செய்தி வெளியாகியது. அதற்கு முன்னதாக ,பதுளை மாவட்டத்தில் இஸ்லாமிய விழுமியங்களின் அடிப்படையில்



சன்மார்க்கப் பணியில் கண்ணும் கருத்துமாக இருந்து செயலாற்றி வந்த அஷ் ஷெய்க் ரிஸான் ஸெய்ன்(நளீமி) யின் மறைவுச் செய்தி எங்களை எட்டியிருந்தது.

இவர்கள் இருவரிலும் ஒத்த தன்மைகள் சிலவற்றைக் காண்கின்றோம். அல் குர்ஆனின் போதனைகளின் அடிப்படையில் இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களைப் பின்பற்றி ,இஸ்லாத்தின் தூதை உரிய முறையில் எத்தி வைப்பதற்காக இருவரும் அர்ப்பணிப்புடன் உன்னதமான பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள்.

நாடளாவிய ரீதியில் இயக்க ரீதியாக இஸ்லாமிய அழைப்புப் பணிக்கு தலைமைத்துவம் வழங்கி வருபவர்களில் ஒருவரான ஷெய்க் உஸைர் (இஸ்லாஹி) அவர்களின் மூத்த சகோதரரான உஸ்தாத் ஹதியதுல்லாஹ் முஹம்மத் முனீர் குறிப்பாக இஸ்லாமியத் தாய்குலத்திற்கு குர்ஆனிய வழிகாட்டுதலை வழங்குகின்ற அரும்பெரும் பணிக்குப் பங்களிப்பாற்றி வந்த நிலையில் , எங்களை விட்டு மறைந்து விட்டார். அவரது குர்ஆனிய விளக்கங்கள் ஆழ்ந்த தெளிவை வழங்கி வந்ததாக அறிகின்றேன்.

ஜாமிஆ நளீமிய்யாவில் கற்றுத்தேறிய அஷ் ஷெய்க் ரிஸான் ஸெய்ன் ,பதுளையிலிருந்து கொண்டு அங்கு ஒரு சர்வதேசப் பாடசாலையை நீண்ட காலமாக நடத்தியவாறு, பின்னர் காதி நீதிபதியாகவும் கடமையாற்றி வந்ததோடு, இஸ்லாமிய தனியார் சட்டம் பற்றிக் கூடுதல் கவனம் செலுத்தி வந்தார். பதுளை மாவட்டத்தை மையப்படுத்தி சமூகத்தில் விவாகரத்துகள் அதிகரித்து வருவதற்கு வழிகோலும் காரணிகளைக் கண்டறிவதிலும் அவர் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார்.

# நஜீப் ஏ.மஜீதின் முன்மாதிரிகள் நாகரீக அரசியலுக்கே அடித்தளம்

## – மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் அனுதாபம் –

நாடறிந்த அரசியல்வாதியும் முதலாவது முஸ்லிம் முதலமைச்சருமான நஜீப் ஏ.மஜீத் அவர்களின் மறைவு நாகரீக அரசியலில் பாரிய இடைவெளியை ஏற்படுத்தியுள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

“நாகரீக அரசியலின் நாயகன் மர்/ஹும் நஜீப் ஏ.மஜீத். சிறந்த அரசியல் புலத்தில் புடம்போடப்பட்ட அவரிடம் ஆழ்ந்த அனுபவங்கள் இருந்தன. தந்தை அப்துல் மஜீதின் பாசறையே அவரது ஆளுமைகளை முழுமைப்படுத்தியது. அவரது தந்தையார் மூதூர் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக நீண்டகாலம் இருந்து திருகோணமலை மாவட்டத்துக்கு அளப்பரிய சேவைகள் செய்தவர். அன்னார் அப்போதைய ஆட்சியில் தகவல் ஒலிபரப்பு பிரதி அமைச்சராக இருந்தபோது நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் அரும்பணியாற்றியவர். ஒலிபரப்புத் துறையில் சீர்திருத்தங்களையும் கொண்டுவந்தவர். தந்தையும் மகனும் இன, மத பேதமின்றி பணியாற்றியதனாலே எல்லோராலும் விரும்பப்பட்டவர்கள்.

மேலும், ஆர்ப்பரிப்பின்றி அமைதியாகச் சாதித்த செயல்வீரனாகவே நஜீப்



ஏ.மஜீத் அவர்களை நான் காண்கிறேன். எம்மோடு இணைந்து அரசியல் செய்த காலத்தில் அவரது ஆளுமைகளை நாம் அடையாளங்கண்டோம். இதனால்தான், கிழக்கு மாகாண முதலமைச்சராக நஜீப் ஏ.மஜீதை நியமிக்கும் முயற்சிகளில் எமது கட்சியும் ஈடுபாடு காட்டியது.

பெருமையின்றி சகலருடனும் பவ்வியமாகப் பழகிய நாகரீக அரசியல்வாதியும் அவர்தான். பழிவாங்கல், கருவறுத்தல் மற்றும் வேரோடு வீழ்த்துதல் போன்ற ஈனச்சிந்தனைகள் அவரிடம் இருந்ததே இல்லை. அதிகாரத்தின் உச்சத்திலிருந்த போதும் அடக்கமாகவே செயற்பட்டவர் நண்பர் நஜீப் ஏ.மஜீத்.



சாய்ந்தமருது கோட்டத்தினால் நடாத்தப்பட்ட ஆரம்பப் பிரிவு வகுப்பிலுள்ள தரம் 3, தரம் 4 வகுப்புகளுக்கான கோட்ட மட்ட கவின்நிலைப் போட்டியில் வெற்றிபெற்ற ஆசிரியைகளுக்கான கேடயங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை (20) இடம்பெற்றது. சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் என். எம்.ஏ. மலிக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான பி. ஜிஹானா ஆலிப், எம்.எச். ரியாஸா ஆகியோர் கலந்து கொண்டனர்.

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

# Amazon College இன் வருடாந்த பட்டமளிப்பு விழா











(இர்ஷாத் ரஹ்மத்துல்லா)

Amazon College கல்வி நிறுவனம் Amazon Campus ஆக கல்வி ராஜாங்க அமைச்சரினால் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

கொழும்பு 4 இல் அமைந்துள்ள Amazon College உயர்கல்வி நிறுவனம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற வருடாந்த பட்டமளிப்பு விழாவில் Amazon Campus ஆக கல்வி ராஜாங்க அமைச்சரினால் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் 120 Diploma மாணவர்கள் 50 HND மாணவர்கள் 150 பட்டதாரி மாணவர்கள் மற்றும் முதுமாணி மாணவர்கள் விருதுகளை பெற்றனர்.

இந்நிகழ்ச்சிக்கு பிரதம அதிதியாக மதிப்பிற்குரிய கல்வி ராஜாங்க அமைச்சர் திரு அரவிந்தகுமார் அவர்களும் பிரதி மாலைதீவுகள் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளின் இலங்கை உயரஸ்தானியர்களும் விசேட அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

இலங்கையின் தேசிய பல்கலைக்கழகங்களில் இருந்தும் சுமார் ஐந்து பேராசிரியர்கள் மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி வைப்பதற்காக வருகை தந்தனர்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் திரு சானக உதயக்குமார அமரசிங்க அவர்களும் விசேட சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார்.

கல்லூரியின் 35 விரிவுரையாளர்கள் 20 ஊழியர்களும் இணைந்து நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர்.

சிறந்த விரிவுரையாளர்களுக்கான விருதுகளும் சிறந்த இணை நிறுவனத்திற்கான விருதுகளும் இந்நிகழ்வில் வழங்கப்பட்டது.

மாணவர்கள் பெற்றோர்கள் ஆகியோர் உட்பட 1000 க்கும் அதிகமானோர் இந்நிகழ்ச்சியை அலங்கரித்தனர் என அமேசான் கல்லூரியின் பணிப்பாளர் இல்ஹாம் மரிக்கார் அவர்கள் தெரிவித்தார்.

# தர்மம் தவறாத ஊடகப்பணிகளை முன்னெடுத்த சிறந்த முன்மாதிரி பி.எம்.ஏ.காதர்

## – மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் அனுதாபம் –

நாடறிந்த ஊடகவியலாளரும் நல்லுள்ளம் கொண்டவருமான பி.எம்.ஏ.காதரின் மரணச் செய்திகேட்டு கடுங்கவலையடைந்துள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் அனுதாபம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"எனக்குத் தெரிந்தவரை மர்/ஹும் பி.எம்.ஏ.காதர் மிக மரியாதையுடன் பழகும் ஒருவர். அவரைச்சுற்றி பெரிய நண்பர் வட்டமே வளருமளவுக்கு அவரது நற்குணங்கள் வித்திட்டன. தர்மம் மீறாமலும் கடமை தவறாமலும் ஊடகப்பணிபுரிந்த உத்தமரென்றும் இவரைச் சொல்லலாம்.

மக்களின் பிரச்சினைகள், சமூகத்தின் சவால்களை தைரியமாக எழுதி தீர்வுகாண முயற்சித்த இவரது பணிகளை நான் பாராட்டுவேன். மருதமுனைக்கு கடந்த வாரம் சென்றிருந்தபோது, அவர் சுகயீனமுற்றிருப்பதை அறிந்து, அவரது இல்லத்துக்குச் சென்று நலம் விசாரித்தேன். அப்போது எனது கையை இறுகப்பற்றிக்கொண்டார். அடிக்கடி என்னை தொலைபேசியில் தொடர்புகொண்டு சமகால அரசியல் நிலவரங்கள் குறித்து பேசுவார்.

சமூக அரசியலுக்கான அரசியலில் எந்தப்பாதை செல்வதென்ற தெளிவும் மர்ஹூம் காதரிடமிருந்தது. உணர்ச்சி அரசியலின்றி யதார்த்த வழிமுறைகள்தான் நடப்பு சவால்களுக்கு தீர்வென்ற தெளிவும் இவரிடமிருந்தது.

# மறைந்த நஜீப் ஏ மஜீத் அரசியலில் வெவ்வேறு மட்டங்களில் பங்களிப்பு

## அனுதாபச் செய்தியில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம்



அதிகாரம் வழங்கப்பட்டிருந்த காலகட்டங்களில், அசையாத இறை நம்பிக்கையோடு, திருகோணமலை மாவட்டத்திற்கும், கிழக்கு மாகாணத்திற்கும், பொதுவாக நாட்டிற்கும் இயன்றவரை பணியாற்றியவராக நஜீப் ஏ மஜீத் விளங்கினார் என அவரது மறைவையிட்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

ஈரானுக்குப் பயணிக்கும் வழியில் துபாய் விமான நிலையத்திலிருந்து இந்த அனுதாப செய்தியை அவர் இன்று(22) வெளியிட்டுள்ளார்.

அதில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அவர் நோயுற்று சிகிச்சைபெற்று வந்த நிலையில் மறைந்த செய்தி என்னை எட்டியபோது கவலையடைந்தேன். முன்னாள் மூதூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும்,பிரதியமைச்சருமான மர்ஹூம் ஏ .எல் அப்துல் மஜீதின் வாரிசாக அரசியலில் பிரவேசித்த நண்பர் நஜீப் பாராளுமன்ற உறுப்பினராகவும்,அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சராக வும்,பிரதியமைச்சராகவும் ,பின்னர் கிழக்கு மாகாண முதலமைச்சராகவும் அரசியலில் வெவ்வேறு மட்டங்களில் சிறப்பான பங்களிப்பைச் செய்துள்ளார். அவரது அரசியல் வாழ்வோடு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ/ம் சம்பந்தப்பட்டிருக்கின்றது.

அவரது இளமைக் காலத்திலிருந்தே அமைதியான சுபாவத்தை இயல்பாகவே கொண்டிருந்த நண்பர் மர்ஹூம் நஜீப் ஏ மஜீத் மக்களுடன் பழகுவதற்கு மிகவும் இனியவராக இருந்தார்.

# அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைக்க வாழ்க்கைச் செலவு குழுவொன்றை அமைக்க வேண்டும்

## – ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுப்பதாக மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் தெரிவிப்பு –

வாழ்க்கை செலவு அதிகரித்து வருவதால் மக்கள் பெரிதும் கஷ்டப்படுவதாகவும், பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மூடப்பட்டுள்ள மஹர சிறைச்சாலை பள்ளிவாசலை நேற்று செவ்வாய்க்கிழமை (19) பார்வையிட சென்றிருந்த போது, ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர்,

"நாட்டில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் கடுமையாக அதிகரித்து வருகின்றன. சந்தையில் அரிசி, மரக்கறிகள் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதால், நுகர்வோர் கடும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். கூலித் தொழில் செய்து பிழைப்பு நடத்தும் மக்களால் வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனைத் தடுக்க அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றேன்.

நல்லாட்சிக் காலத்தில் நான் வர்த்தக அமைச்சராக இருந்த போது, அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வாராவாரம் எம்மைச் சந்தித்து, அத்தியாவசிய பொருட்களின் விலைகளின் ஏற்ற இறக்கம் தொடர்பில் கலந்தாலோசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஆனால், தற்போது அப்படியொரு நடைமுறை இருப்பதாகத் தெரியவில்லை. இப்பொழுது அவர் ஜனாதிபதி என்பதால் வேலைப்பளு அதிகரித்துவிட்டதோ என்னவோ. எவ்வாறாயினும் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் நாளாந்தம் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுங்கள். இது தொடர்பில் வர்த்தக அமைச்சரோடு பேசி, வாழ்க்கைச் செலவுக் குழு ஒன்றை நியமித்து, அரிசி, மரக்கறிகள் போன்ற அத்தியாவசிய பொருட்களையாவது மக்களுக்கு சாதாரண விலைகளில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்" என்றார்.

இதேவேளை, முட்டை இறக்குமதி தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட்,

"முட்டைகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதை ஒருபோதும் நான் அனுமதிக்கமாட்டேன். நாட்டில் இவ்வளவு காலமும் இடம்பெறாத ஒரு வேலைத்திட்டமே இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதை உடனடியாக நிறுத்த வேண்டும். அதேபோன்று, முட்டை உற்பத்தியாளர்களும் முட்டையை சாதாரண விலையில் மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

# கல்முனை பிராந்தியத்தில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமும் விழிப்புணர்வு நிகழ்வும்

(எம்.எம்.ஜெஸ்மின்)

கல்முனை பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவு மற்றும் பூச்சியியல் ஆய்வுகூடம் ,கல்முனைப் பிரதேசத்திலுள்ள பொது அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் டெங்கு ஒழிப்பு விசேட வேலைத்திட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது

இலங்கை ஜமாஅதே இஸ்லாமி, கல்முனை கிளையின் தலைவர் எஸ்.எல்.எம். கரீம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர்.திருமதி ஸக்கீலா இஸ்ஸதீன் கலந்து கொண்டார்

இந்து ஆலயத்தின் முக்கிய பிரமுகர்களும் பள்ளிவாசலின் முக்கிய பிரதிநிதிகளும் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி, கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி, பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் கல்முனை மாநகர சபை ஊழியர்கள் என தொடரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பிரதேசத்திலுள்ள அனைத்து தமிழ் முஸ்லிம் வீடுகளுக்கும் தொண்டர்கள் சென்று வீடுகளின் உள்பகுதி உட்பட சுற்றுப்புறங்களை பரிசோதனை செய்து டெங்கு தொடர்பான விழிப்புணர்வை வழங்கியதுடன் டெங்கு நுளம்பு பெருகும் பொருட்களை வீட்டிலுள்ளவர்களின் துணையுடன் அகற்றி மாநகர சபை வாகனங்களில் ஒப்படைத்தனர்.



# பிரதீப் யசரத்ன அமைச்சின் செயலாளராக நியமனம்

(எம்.எஸ்.எம்.முன்தஸிர்)



மேல் மாகாண பிரதம செயலாளர் பிரதீப் யசரத்ன பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் புதிய செயலாளராக நியமனம் பெற்றுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் விஷேட வகுப்பு உத்தியோகத்தரான இவர் ஏற்கனவே இரத்மலான,ஹோமாகம பிரதேச செயலாளராகவும், கொழும்பு மாவட்ட செயலாளர் உள்ளிட்ட பல்வேறு அரச துறைசார்ந்த பதவிகளையும் வகித்துள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரி பழைய மாணவரான இவர் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான துறை கௌரவ பட்டதாரியும் , களனி பல்கலைக்கழக சாஸ்திர பீட பட்டதாரியுமாவார்.

# ஜீவனின் செயலாளராக நபீல்



நீர் வழங்கல் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளராக இலங்கை நிர்வாக சேவையின் மூத்த உத்தியோகத்தர்களில் ஒருவரான ஏ.சீ எம். நபீல் நியமிக்கப்பட்டுள்ளார்.

பல அமைச்சுக்களில் மேலதிக செயலாளராகப் பதவியை வகித்த நபீல், எதிர்வரும் முதலாம் திகதி முதல் இந்த பதவியை ஏற்கவுள்ளார்.

புத்தளத்தைச் சேர்ந்த இவர், இறுதியாக ரவூப் ஹக்கீம் நீர் வழங்கல் அமைச்சராக இருக்கும் போது அங்கு மேலதிக செயலாளராகப் பணிபுரிந்தார்.

# இலங்கை காதி நீதிபதிகளின் ஒன்றியம் – புதிய நிர்வாக சபை தெரிவு



Sri Lanka Quazi Judges Forum
Hon. President M. Ifham Yehiya
BBA(UK), BSc (Counselling),LLB (R)
Quazi Judge - Ratnapura District



Sri Lanka Quazi Judges Forum
Hon. Secretary
M. S. M. Amhar AAL. Naleemi
Quazi Judge - Colombo West



Sri Lanka Quazi Judges Forum
Hon. Treasurer
As Shiekh M. R.M. Naizar
Quazi Judge Panadura

இலங்கை காதி நீதிபதிகளின் ஒன்றியம் அதன் வருடாந்த பொதுக் கூட்டத்தை 17 டிசம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமை கண்டி திருகோணமலை தெருவில் உள்ள ஜின்னா நினைவு மண்டபத்தில் நடத்தியது.

இலங்கை காதி நீதிபதிகள் ஒன்றியத்தின் தலைவரும், மாவனல்லை பிரிவுக்கான காதி நீதிபதி அஷ்-ஷெய்க் குபௌஸ் லத்தீப் அவர்கள் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

அவர்களின் பதினேழு வருடங்களாக தமது மன்றத்திற்காக அர்ப்பணித்தமைக்காகவும் அவரது பதவிக்காலத்தில் 25 காதி பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்தியதற்காகவும் அவருக்கு நினைவு சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அதை தொடர்ந்து நிறைவேற்று குழு அங்கத்தவர்கள் தமது பதவிகளிருந்து விலகிக்கொண்டார்கள்.

பிறகு 2024 முதல் 2027 வரைக்கான புது நிர்வாக சபை தெரிவு நடைபெற்றது.

அதன் முடிவுகள் பின்வருமாறு

தலைவர்: காதி நீதிபதி இகப்ஹாம் யெஹியா BSc (UK), BA (UK), LLB (UG) - இரத்தினபுரி மாவட்ட காதி நீதவான்

செயலாளர்: காதி நீதிபதி M. S. M. அம்ஹர் (AAL) நளீமி - கொழும்பு மேற்கு காதி நீதவான்.

பொருளாளர்: காதி நீதிபதி அஷ் ஷேக் M. R. M. நைசர் - பாணந்துறை காதி நீதவான்

1வது துணைத் தலைவர்: காதி நீதிபதி அஷ் ஷேக் A. L. அப்துல் ககப்கபார் - யட்டினுவேர காதி நீதவான்

2வது துணைத் தலைவர்: காதி நீதிபதி ஆ.ரஹ்மத்துல்லாஹ் - புத்தளம் மாவட்ட காதி நீதவான்

துணைச் செயலாளர்: காதி நீதிபதி A. H. இப்ராஹிம் சாஹிப் - குருநாகல் காதி நீதவான்

துணை பொருளாளர்: காதி நீதவான் B. ஜலால்தீன் ஹம்பாந்தோட்டை மாவட்ட காதி நீதவான்

செயற்குழு உறுப்பினர்கள்:

1. M. I. M. இல்லியாஸ் நிந்தவூர் பத்து காதி நீதவான்
2. A. H. M. ஜிகப்ரி- காலி மாவட்ட காதி நீதவான்
3. J. M. . இக்பால் - முத்தூர் காதி நீதவான்
4. அஷ் ஷேக் I. M. குஃபலீல் நுவர எலியா காதி நீதவான்
5. அஷ் ஷேக் S. L. அஸ்கர் கான்- அவிசாவளை காதி நீதவான்
6. U. S. M. நசீர் யுயுடு ஹட்டன் காதி நீதவான்
7. S. M. நியாஸ் - கண்டி நகர காதி நீதவான்

அனைவரின் ஏகமனதான தீர்ப்புக்கு ஏற்ப ஆலோசகராக அஷ்-ஷேக் குஃபவுஸ் லத்தீப் நியமிக்கப்பட்டார்.

# புதிய இந்திய உயர் ஸ்தானிகர் பதவியேற்பு!



2023 டிசம்பர் 22ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் ஜனாதிபதி அதி மேதகு ரணில் விக்கிரமசிங்க அவர்களிடம் தனது நியமனச் சான்றுப்பத்திரங்களைக் கையளித்து இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகராக பதவியேற்றார்.

2. இந்தியாவின் சிரேஸ்ட இராஜதந்திரியான திரு ஜா அவர்கள் கொழும்பில் தனது பதவியினைப் பொறுப்பேற்பதற்கு முன்னதாக ஐரோப்பிய ஒன்றியம், பெல்ஜியம் மற்றும் லக்ஸம்பேர்க் ஆகியவற்றுக்கான இந்தியாவின் தூதுவராக கடமையாற்றியுள்ளார். அத்துடன் 2019 முதல் 2020 வரை உஸ்பெகிஸ்தானுக்கான இந்திய தூதுவராகவும் அவர் கடமையாற்றியதுடன் 2017 முதல் 2019 வரை வாஷிங்டன் டிசியில் உள்ள இந்திய தூதரகத்தில் தூதரக பிரதி தலைமை அதிகாரியாகவும் சேவையாற்றியுள்ளார். மேலும், புது டில்லியில் உள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சில் மனிதவள மற்றும் முகாமைத்துவ விவகாரங்கள் பிரிவு, மேற்கு ஐரோப்பா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவுகளுக்கான பிரிவு, கொள்கை திட்டமிடல் பிரிவு ஆகியவற்றின் தலைமைப்பதவிகள் உட்பட பல்வேறு முக்கிய பதவிகளில் அவர் சேவையாற்றியுள்ளார்.

3. மேலும், 2007 முதல் 2010 வரை கொழும்பிலுள்ள உயர் ஸ்தானிகராலயத்தில் வர்த்தக மற்றும் பொருளாதார விவகாரங்களை நிர்வகிக்கும் கவுன்சிலராக உயர் ஸ்தானிகர் ஜா அவர்கள் சேவையாற்றியுள்ளார். இக்காலப்பகுதியில் குறிப்பாக இந்திய இலங்கை அபிவிருத்தி ஒத்துழைப்பினை கட்டியெழுப்புவதில் அவர் முக்கிய வகிபாகத்தைக் கொண்டிருந்தார்.

4. அவர் ஸ்ரீமதி தனுஜா ஜா அவர்களைத் திருமணம் செய்துள்ளதுடன் இவர்களுக்கு ஒரு மகளும் ஒரு மகனும் உள்ளனர்.

# சமூகத்தை வழிநடத்த இளையோரையும் பெண்களையும் உள்ளடக்கிய சமூக வலையமைப்புக்கள் உருவாக்கப்படுகின்றன

## இளம் பெண்கள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அஜானி காசிநாதர்




(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

சமூகத்தை வழிநடத்த இளையோரையும் பெண்களையும் உள்ளடக்கிய சமூக வலையமைப்புக்கள் உருவாக்கப்பட்டு வருவதாக சேர்க்கிள் (ஊஐசுஊடுநு) இளம் பெண்கள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அஜானி காசிநாதர் தெரிவித்தார்.

பெண்கள் மற்றும் இளைஞர் வலையமைப்பின் நிலைத்தன்மை பற்றிய கலந்துரையாடல் செயலமர்வு மட்டக்களப்பு வாலிப கிறிஸ்தவ இயக்க மண்டபத்தில் புதன்கிழமை 20.12.2023 இடம்பெற்றது.

மாவட்டத்திலுள்ள மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கள உதவியாளர்கள், சிறுவர் உரிமைகள் அபிவிருத்தி அலுவலர்கள், சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள், இளைஞர் சேவைகள் மன்ற அலுவலர்கள் பெண்கள் மற்றும் இளைஞர் வலையமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோர் மத்தியில் பரிந்துரைப்பு செயலமர்வைத் துவக்கி வைத்து அவர் உரையாற்றினார்.

நிகழ்வில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த சேர்க்கிள் இளம் பெண்கள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அஜானி,

இளையோரும் பெண்களும் பார்வையாளர்களாகவன்றி பங்கேற்பாளர்களாக மாறி சமூகத்தில் அபிவிருத்தியையும் சகவாழ்வையும் ஏற்படுத்த வேண்டும் அதுவே நிலையான தங்குதிறனுள்ள முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்பதால் இத்தகைய சமூக மட்ட வலையமைப்புக்கள் சமூகப் பங்களிப்போடு உருவாக்கப்படுகின்றன.

இளைஞர்களும் பெண்களும் பரிந்துரைப்பு முயற்சிகளில் ஈடுபட்டு, அதன் விளைவாக சமூகத்தை வழிநடத்திச் செல்ல வேண்டும்.

கிராம மக்கள் உள்ளூரில் கிடைக்கக் கூடிய வளங்களை உச்ச மட்டத்தில் பயன்படுத்திக் கொள்வதற்கும் கிடைக்கக் கூடிய அரச அரச சார்பற்ற சேவைகளை இலகுவில் அணுகுவதற்கும் வலையமைப்புக்கள் செயல் திறனுள்ளதாக செயற்படவேண்டும்.

இந்த அணுகுமுறை உள்ளூரில் சிறந்த தலைமைத்துவங்களை உருவாக்குவதற்கும் ஓரங்கட்டலைத் தவிர்த்து பயனுறுதி மிக்க சேவைகளைப் பெற்றக் கொள்வதற்கும் வழிவகுக்கும்.

குறிப்பாக வலைமைப்புக்கள் மூலம் சமூக மக்களால் அடையாளங் காணப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு தேவைகளையும் இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும். இதுவே இந்த வலையமைப்புச் செயற்பாட்டில் உள்ள சிறப்பம்சமாகும்.

எனவே, இந்த விடயத்தில் இளையோரினதும் பெண்களினதும் வகிபாகம் மிக முக்கியமானது என்பதைக் கருத்திற் கொண்டு உள்ளூர் மட்டத்தில் செயல்பாட்டு வலையமைப்புக்கள் உருவாக்கப்பட்டு இயங்கி வருகின்றன. அதில் பங்கெடுக்கும் வலையமைப்பக்களை வலுப்படுத்தவற்கான உதவு ஊக்கங்கள் சேர்க்கிள் அமைப்பினால் வழங்கப்பட்டு வருகின்றன - என்றார்.

# மொழி மற்றும் கலாசாரத்தினூடாக சுற்றாலாத் துறைக்கு புத்துணர்ச்சி!

## தென்கிழக்குப் பல்கலையில் சர்வதேசக் கருத்தரங்கம்!!



"நிலைபேறான சுற்றாலாத் துறைக்கு மொழி மற்றும் கலாசாரம்" எனும் தலைப்பில் 2023.12.14 ஆம் திகதி இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசாரபீட மொழித்துறையின் ஏற்பாட்டில் கலை கலாசார பீட கேட்போர் அரங்கில், மொழித்துறைத் தலைவர் கலாநிதி ஏ. விக்கிரமரட்ன தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வின் பிரதம அதிதியாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அவர்களும் அதிதிகளாக கலை கலாசாரபீட பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் மற்றும் கேரளா, கொச்சின் விஞ்ஞான தொழிநுட்பப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பி. அருணாச்சலம் அவர்களும் கலந்து கொண்டனர்.

மொழித்துறைத் தலைவர் கலாநிதி. ஏ. விக்கிரமரட்ன அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இக்கருத்தரங்கில் மொழித்துறை சார்பாக சிரேஷ்ட விரிவுரையாளர்களான பேராசிரியர் ஏ.எப். எம். அஷ்ரஃப், கலாநிதி. க. இரகுபரன், ந. சுபராஜ் ஆகியோர் ஆய்வு ரீதியான கருத்துக்களை முன்வைத்து உரை நிகழ்த்தினர். தொடர்ந்து, இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் வருகை தந்த பேராசிரியர்கள், கலாநிதிகள், விரிவுரையாளர்கள், பணிப்பாளர்கள் ஆகியோர் சிறப்புரைகள் நிகழ்த்தினர்.

கருத்தரங்கில், இலங்கைச் சூழலில் மொழி மற்றும் கலாசாரத்தினூடாக சுற்றுலாத்துறையை வளர்ப்பதில் உள்ள சாதகங்கள், சவால்கள், சாத்தியப்பாடுகள் என்பன காத்திரமான உரைகளாக முன்வைக்கப்பட்டன. சுற்றுலாத் துறையில் மேம்பாடடைந்திருக்கும் இந்திய, அறபுலக மற்றும் சர்வதேச நாடுகள் தங்களது நிலையான சுற்றுலாத்துறைக்கு மொழி மற்றும் கலாசாரத்தை முன்வைத்து மேற்கொள்ளும் முயற்சிகள் பற்றி விரிவாக பேசப்பட்டன.

இலங்கை கிழக்கு மாகாணத்தில் இத்துறையை மேம்பாடடையச் செய்வதில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வகிபாகம் பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டது. பார்வையாளர்களாக அமர்ந்திருந்த கல்வியலாளர்கள் மற்றும் மாணவர்களின் கருத்துக்களும் கேட்டறியப்பட்டது நிகழ்வின் முழுமையை எடுத்துக் காட்டியது.

## மனநலமும் ஆலோசனையும் 11

# மணவாழ்வில் “மரியாதை”

மரியாதை என்பது மனிதனின் அடிப்படை தார்மீகத் தேவைகளில் ஒன்று. அது இல்லாமல் மனித உறவுகள் நிலைப்பதில்லை.

நாம் காட்டு விலங்குகளில் இருந்து முற்றிலும் வேறுபட்டவர்கள் என்பதை எடுத்துக்காட்டுவது மரியாதை. நாம் உயர்வான மனிதர்கள் என்பதை மற்றவர்களுக்கு உணர்த்துவதும் மரியாதை.

இந்த பூமியில் வாழும் அனைத்து மனிதர்களுக்கிடையில் நமது மனிதாபிமான அடையாளத்தை நிரூபிக்க எமக்கு கிடைத்திருக்கும் பலமான ஆயுதம் மரியாதை

தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் உயர்குடிப் பிரிவைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர் மதிக்கப்பட வேண்டும் என்பதுவே மானிட சமத்துவக் கோட்பாடு.

மற்றவர்களை மதித்தல் என்பது அவர்களுக்கான நமது உணர்வை வெளிப்படுத்த எமக்கு கிடைத்திருக்கும்

ஒரு அமைதியான வழி...

மதித்தல் என்பது ஒரு பேசப்படாத தகவல் தொடர்பு வழி...

மதித்தல் என்பது மனிதர்களுக்கு இடையே வலுவான உறவுகளை உருவாக்குகின்ற உருக்கமான வழி.

ஒரு நபர் இன்னுமொரு நபருக்கு மரியாதை காட்டினால் அந்த நபருக்கு அவர் மீது மதிப்பு இருக்கிறது என்று அர்த்தம்.

மணவாழ்விலும் கணவன் மனைவி இருவரும் இந்த அர்த்தத்தை அழகாக அனுபவிக்க ஆசைப்படுகிறார்கள். ஒருவர் மற்றவரினால் மதிக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். மனிதர்கள் என்ற வகையில் ஒருவர் மற்றவரினால் மதிக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பதில் தப்பேதும் இருக்காது.

மணவாழ்வில் ஒருவரையொருவர் அவமரியாதை செய்வது அல்லது மரியாதை கொடுக்காமல் நடந்து கொள்வது மண உறவை அழிக்கக்கூடிய மிக முக்கிய காரணங்களில் ஒன்றாகும். எந்தவொரு உறவின் அடித்தளமும் மரியாதையுடன் தான் தொடங்குகிறது.

கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் அவமரியாதையாக இருந்தால், அவர்கள் மண வாழ்க்கை உறவை எவராலும் எதுவாலும் காப்பாற்ற முடியாமல் போய்விடும்.

கணவன் மனைவி ஒருவர் மற்றவரை மதிப்பதன் மூலம் வலுவான, அழகான, ஆரோக்கியமான மணஉறவு கட்டமைக்கப்பட்டுகிறது. மரியாதையுள்ள சமூகத்தை நிர்மாணிப்பதில் இந்த கட்டமைப்பு பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றது.

திருமணத்தின் வெற்றிக்கு மரியாதை மிகவும் முக்கியமானது. இது அன்பை விட உயர்ந்த இடத்தில் இருக்கிறது.

மரியாதை என்பது அன்பைப் போன்றதல்ல. அன்பை விட ஆழமானது. கணவன் அல்லது மனைவி ஒருவரை ஒருவர் மதித்து நடப்பதை இருவரும் உணர்வார்களானால் அங்கு இறைவனின் அருளும் ஆசிர்வாதமும் தாராளமாக இருக்கும். தடையின்றி தளிர் விடும். அழகான வலுவான குடும்ப உருவாக்கத்திற்கான அடித்தளம் அமைந்துவிடும்.

எனவே திருமணத்தில் கணவனும் மனைவியும் மதிப்பும் மரியாதையும் கொடுப்பதில் ஒருவருக்கு ஒருவர் முந்திக்கொள்ள வேண்டும். அவர் முதலில் தரவேண்டும் அல்லது இவர்தான் முதலில் தரவேண்டும் என்று பார்த்து இருக்கலாகாது.

மரியாதையும் அர்ப்பணிப்பும் கொண்ட மண உறவு மட்டுமே காலத்தின் சோதனைகளை வென்று சாதனைகள் படைக்க சான்றாக இருக்கும்.

மணவாழ்வில் ஒருவருக்கொருவர் எண்ணங்களுக்கும் உணர்வுகளுக்கும் மதிப்பளிப்பது உறவை மேம்படுத்துவதற்கும் மகிழ்ச்சியான நிறைவான மணவாழ்க்கை வாழ்வதற்கும் வழிவகுக்கும்.

கணவன் மனைவி இருவரும் அருள் இறைவனின் அழகான பிரதிநிதிகள் என்பதால் இருவரும் ஒருவருக்கொருவர் மதிப்புடனும் மரியாதையுடன் நடந்து கொள்ள கடமைப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்பதை நாம் கட்டாயம் ஏற்றுக் கொள்ளவோம்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# ஜனாதிபதி என்ற ரீதியில் ரணில் விக்கிரமசிங்க கட்சி சார்பற்ற அரசியல் ஜனாதிபதியாக செயற்பட வேண்டும்

## – ரவி கருணாநாயக்க தெரிவிப்பு –



(ஐ. ஏ. காதிர் கான்)

எதிர்வரும் (2024) ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க கட்சி சார்பற்ற வேட்பாளராக களமிறங்குவார் என, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, கொழும்பில் (20) புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போது தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை முன்வைக்க வேண்டியது, அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் உடனடித் தேவையாக உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஏனைய கட்சிகளும் இணைந்து இந்த நாட்டை அபிவிருத்திப் பயணத்தில் கொண்டு செல்கின்றன. மேலும், நாட்டைக் கொண்டு செல்வது, இலகுவான பயணம் அல்ல. இது ஒரு இருண்ட பயணம். எனினும், ஒருவித முன்னோக்குப் பார்வையுடன் கூடிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

மக்கள் முழு ஆதரவைப் பெறாவிட்டாலும், அவர்கள் படு குழியில் இருந்து வெளியே வந்து, அதைப் பத்திரப்படுத்திக் கொண்டுள்ளனர். எனவே, முன்னோக்கிச் செல்வதை எதிர்நோக்க வேண்டும்.

2024 ஆம் ஆண்டு மக்களுக்கும் நாட்டுக்கும் மங்களகரமான ஆண்டாக இருக்கும் என்று நம்புகிறோம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

”ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் யார்...?” என, ஊடகவியலாளர் ஒருவர் இதன்போது அவரிடம் கேள்வி கேட்டபோது, அதற்கு ரவி கருணாநாயக்க, “ஜனாதிபதி என்ற ரீதியில் ரணில் விக்கிரமசிங்க கட்சி சார்பற்ற அரசியல் ஜனாதிபதியாக செயற்பட வேண்டும். அவர், அனைத்து கட்சிகளின் கூட்டாக இதனைச் செய்கிறார். பலர் போட்டியிட விரும்புகிறார்கள். ஆனால், ஒரு நாட்டின் அராஜகத்திற்கு இட்டுச்செல்லக்கூடிய இவ்வாறான வடிவங்களைக் கொண்டவர்கள் மிக மிகக் குறைவு” என்று பதில் அளித்தார்.

# இவ்வருடம் 16 வயதுக்குட்பட்ட 2000 சிறுமிகள் தாயாகியுள்ளனர்

## –தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அதிர்ச்சித் தகவல்–

(ஐ.ஏ. காதிர் கான்)

இவ்வருடம் 16 வயதுக்குட்பட்ட 2000 சிறுமிகள் தாயாகியுள்ளதாக, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொலிஸாரின் அறிக்கையின்படி, கடந்த நவம்பர் மாதத்தில் மாத்திரம் 16 வயதுக்குட்பட்ட 10 சிறுமிகள் கர்ப்பம் தரித்துள்ளதாகவும் அமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

16 வயதுக்குட்பட்ட பெண்கள் தாயாக மாறுவது, தற்போது சமூக மற்றும் சட்டப் பிரச்சினையாக மாறியுள்ளதாகவும், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பெண்கள் - சிறுவர்களுக்கெதிரான துன்புறுத்தல்கள்: அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகம்

(ஐ. ஏ. காதிர் கான்)

பெண்கள், சிறுவர்கள் எதிர்கொள்ளும் துன்புறுத்தல்கள் மற்றும் ஒடுக்குமுறைகள் தொடர்பில் அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

2024 ஆம்ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் 24 மணி நேரமும் இயங்கும் வகையில், குறித்த அவசர தொலைபேசி எண் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக, அமைச்சர் டிரான் அலஸ் கொழும்பில் (19) செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போது தெரிவித்தார்.

பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நிர்வகிக்கும் வகையில், இந்த அவசர தொலைபேசி இலக்கம் இயங்குவதுடன், இவ்விலக்கத்தின் ஊடாக நாட்டின் எந்தப் பிரதேசத்திலிருந்தும் எந்தவொரு மொழியிலும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தெரிவிக்க முடியும் என்றும் அமைச்சர் இதன்போது கூறினார்.

இந்த அழைப்பு மையத்தின் மூலம், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு மிகவும் நம்பகமான மற்றும் தனியுரிமை பாதுகாக்கப்படும் வகையிலான சேவைகள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# கொழும்பு கிளிப்டன் ஒழுங்கை “த்ரீ ஸ்டார்ஸ்” சர்வதேச பாலர் பாடசாலையின் 21ம் வருட கலை விழா











(ஐ.ஏ. காதிர் கான்)

கொழும்பு - 09, கிளிப்டன் ஒழுங்கையில் (2002 முதல்) நடத்தப்பட்டு வரும் ”த்ரீ ஸ்டார்ஸ்” சர்வதேச பாலர் பாடசாலையின் 21 ஆம் வருட கலை விழா மற்றும் பரிசளிப்பு வைபவம் என்பன, கொழும்பு - நகர மண்டபம் (டவுன்ஹோல்) பொது வாசிகசாலை உள்ளரங்கில், (வியாழக்கிழமை) வெகு விமர்சையாக இடம்பெற்றன.

பல் நிபுணத்துவ (Dental therapist) வைத்தியர் ஹெஷானி நிரோதா வன்னி நாயக்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு, இளஞ்சிறார்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தார்.

பாலர் பாடசாலையின் பணிப்பாளர் எம். முன்ஸிப் நிஸார் வழிகாட்டலில், அதிபர் எப். பணஸ்லியா புகாரி தலைமையில், உதவி ஆசிரியைகளான நுஸ்ரா, நணஸ்னீன், சியானா ஆகியோரின் நெறிப்படுத்தலின் கீழ், இச்சிறப்பு கலை விழா நிகழ்வுகள் அலங்கரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிறார்களின் கலை கலாசார நிகழ்வுகள் பலவும் மேடையேற்றப்பட்ட இந்நிகழ்வுகளுக்கு, பெற்றோர்களின் பாரிய பங்களிப்புக்கள் கிடைத்தமைக்கு, அதிபர் பணஸ்லியா இதன்போது நன்றி பாராட்டினார்.





கண்டி – கசாவத்தை முஸ்லிம் வித்தியாலயத்தின் 1973 – 2023 வரையான 50 வருட பூர்த்தி பொன் விழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சி அண்மையில் (14) பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றபொது எடுக்கப் பட்ட படங்கள்.

(ராபி சிஹாப்தீன்)